ශ්‍රී ලංකා හස්ත කර්මාන්ත මණ්ඩලය

இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை

Sri Lanka Handicrafts Board

LAKSALA

State Gift & Souvenir Boutique











2020

වාර්ෂික වාර්තාව

ஆண்டு அறிக்கை

Annual Report



ஆண்டறிக்கை 2020

லக்சல

இலங்கை கைப்பணிகள் சபை

உள்ளடக்கம்

நிறுவனப் பின்னணி 01

லக்சல காட்சிகூடங்களின் வலையமைப்பு 02

நோக்கு மற்றும் செயற்பணி 03

செயலாற்றுகை மீளாய்வு, தொழிற்பாட்டு மீளாய்வு 04 - 11

பணிப்பாளர் சபை 12

சிரே்ட முகாமைத்துவக் குழு 13

நிதிக் கூற்றுக்கள்

விரிவான வருமானக் கூற்று 17

நிதி நிலைமைக் கூற்று 18

உரிமை மூலதன மாற்றங்களின் கூற்று 19

காசுப் பாய்ச்சல் கூற்று 20

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 21 - 44

கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை 45 - 60

அமைப்பின் தகவல்கள்

சபையின் பெயர்

இலங்கை கைப்பணிகள் சபை – லக்சல

சட்டத்துடனான படிவம்

1982ஆம் ஆண்டு 35 ஆம் இலக்க, தேசிய கைப்பணிகள் சபை மற்றும் இணைந்த நிறுவனங்கள் சட்டத்தால் தாபிக்கப்பட்ட நியதிச்சட்ட நிறுவனமாகும்.

பிரதான அலுவலகம்

இலக்கம் : 215, பௌத்தாலோக்க மாவத்தை,கொழும்பு.7

தொலைபேசி : 011 2055132 / 011 2055501

தொலைநகல் : 011 2594872

சந்தைப்படுத்தல் தகவல் விசாரணை

மின்அஞ்சல் முகவரி : *info@laksala.gov.lk*

இணையதளம் : www.laksala.gov.lk

விற்பனை தகவல்கள்

தொலைபேசி : 011 2597797

மின்அஞ்சல் முகவரி : *info@laksala.gov.lk*

கணக்காய்வு

லக்சல தேசிய கணக்காய்வு அலுவலகம்

வங்கிகள்

இலங்கை வங்கி

மக்கள் வங்கி

லக்சல காட்சிகூடங்களின் வலையமைப்பு

1.கோட்டை	இலக்கம் 60, யோர்க் வீதி, கொழும்பு 01	0112323514
2.தும்முல்லை	இலக்கம் 215, பௌத்தாலோக்க மாவத்தை, தும்முல்லை, கொழும்பு 07.	0112580579
3.கண்டி	இலக்கம் 05, சங்கராஜ மாவத்தை, கண்டி	0812222087
4.கட்டுபெத்த	இலக்கம் 282, காலி வீதி, கட்டுபெத்த, மொரட்டுவ	0112605600
5.தேசிய நூதனச்சாலை	லக்சல, நூதனச்சாலை வளாகம், கொழும்பு 07.	0112698263
6.பத்தரமுல்லை	அபேகம, பெலவத்தை, பத்தரமுல்லை. தெற்கு அதிவேக வீதி, விராம மந்திரய, சேவை	0112786026
7.வெலிபன்னை I	பிரதேசம், "பி", ஏ5 மற்றும் ஏ6, வெலிபன்னை	0342241607/8
8. காலி	இலக்கம் .74/1, சமுத்திர மாவத்தை, காலி.	0912222783
9.பின்னவளை	யானைகளின் சரணாலயம், பின்னவளை.	0352265015
10.பேராதனை	இலக்கம் 14, தாவரவியல் பூங்கா, பேராதனை.	0812389253/63
11.கட்டுநாயக்க	54டி, வெளியேறும் போக்குவரத்து பகுதி , பண்டாரநாயக்கா சர்வதேசவிமான நிலையம், கட்டுநாயக்க	011226017
12.நுவரெலியா	இலக்கம் 79. பழைய உடுபுஸ்ஸல்லாவ வீதி, நுவரெலியா	052-2234445

எமது நோக்கு

இலங்கையில் பரிசுகள் மற்றும் நினைவுப் பரிசு பொருட்கள் சந்தையின் முதன்மையாளர் ஆகுதல்.

எமது செயற்பணி

பரிசுகள் மற்றும் நினைவுப் பரிசு பொருட்கள் துறையில் வளர்ச்சித் திறனை விரிவுபடுத்துவதோடு, சுற்றுலாக் கைத்தொழிலுக்கு உயர் பெறுமதிகளை சேர்க்கும் பங்களிப்பை வழங்கி, கிராமிய உற்பத்தியாளர்களுக்கு பெரிய விரிவான சந்தை வாய்ப்புகளுக்கு வசதியளித்து, சமூக பொறுப்புகளை நிறைவேற்றும் வர்த்தக ரீதியாக சாத்தியமான நிறுவனமாதல்.

எமது கேந்திர பெறுமதிகள்

- தரம், நம்பகத்தன்மை மற்றும் பணத்திற்கான பெறுமதி.
- பன்முகப்படுத்தப்பட்ட பரிமாணத்தின்மூலம் சிறந்த வாடிக்கையாளர் தேர்வுக்கான வாய்ப்புகளை வழங்குதல்.
- கிராமிய மக்களிடையே பெறுமதிகளை உருவாக்குதல் மற்றும் பெறுமதிகளை பரிமாற்றம் செய்தல்
- வாடிக்கையாளர்களை ஆகக்கூடிய மட்டத்தில் திருப்திபடுத்தல்.

நிலைபேறுடனான அபிவிருத்தி இலக்குகள்

- 2030ஆம் ஆண்டில் உள்நாட்டு வழங்குநர்களிடமிருந்து கொள்வனவு செய்கின்ற உற்பத்திகளின் அளவுகளை இரட்டிப்பாக்கி உள்நாட்டு உற்பத்திகளை மேம்படுத்தல்.
- 2030 ஆண்டாகும்போது பாலின சமத்துவத்தை அடைந்துக்கொள்ளும் நோக்கத்துடன் லக்சலவ பொருட்கள் வழங்கும் பெண் வழங்குநர்களின் மொத்த எண்ணிக்கையை 50% ஆல் விருத்தி செய்தல்.
- விசேட தேவைகள் உள்ளவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு 2030 ஆகும்போது விசேட தேவை உள்ள வழங்குநர்களின் எண்ணிக்கையை 25% ஆல் விருத்தி செய்தல்.




உள்நாட்டு கைப்பணிகள் உற்பத்தியாளர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தை வாய்ப்புகளை உருவாக்கும் நோக்கத்துடன், 1964 ஆம் ஆண்டில் லக்சல நிறுவனம் தாபிக்கப்பட்டதுடன், 1982 ஆம் ஆண்டு 35 ஆம் இலக்க தேசிய அருங்கலைகள் பேரவை மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் சட்டத்தின்கீழ் இலங்கை கைப்பணி கைத்தொழிற் சபையாக அதனை தாபிக்கப்பட்டது. இத் துறையில் தற்போது லக்சல நிறுவனமானது அரசாங்கத்திற்குரிய மிக பழமையானதும் பெரியதுமான வலையமைப்பாகி உள்ளது.


.

நிதிசார் செயலாற்றுகை சாராம்சம்

2020 ஆம் ஆண்டின் மீளாய்வு ஆண்டில் லக்சலவின் மொத்த விற்பனை புரள்வு ரூபா 194,740,004.00 ஆக பதிவு செய்துள்ளதுடன், அதன் விற்பனை செலவினம் ரூபா. 85,307,833.00 ஆகும். பின்வரும் வரைப்படம் மூலம் கடந்த ஐந்து ஆண்டுகளில் லக்சலவின் ஒட்டு மொத்த விற்பனை சாராம்சம் காட்டப்படுகின்றது.




2020 ஆம் ஆண்டில் விற்பனை பகுப்பாய்வில் தும்முல்லை காட்சிக்கூடம் ரூபா. 79,691,725.00 ஆன விற்பனை மேற்கொண்டு விற்பனைகளின் பொருட்டு பிரதான பங்களிப்பை வழங்கியுள்ளதுடன், காலி கண்காட்சிக்கூடம் ரூபா. 19,402,867ஆன புரள்வுடன் அடுத்ததாக பங்களிப்பு வழங்கியுள்ளது.




கொள்வனவு பகுப்பாய்வு

2020 ஆண்டில் லக்சல ரூபா. 77,428,649.00 பெறுமதிக்கு வியாபார கொள்வனவுகளை மேற்கொண்டுள்ளது. பின்வரும் வரைப்படம் மூலம் கடந்த ஐந்து ஆண்டுகளில் கொள்வனவு விபரங்கள் காட்டப்பட்டுள்ளன.



பின்வரும் வரைப்படத்தின் வகைப்படுத்தலுக்கு அமைவாக 2020 ஆம் ஆண்டின் ஏற்புடைய கொள்வனவுகள் மேலும் காண்பிக்கப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டில் கொள்வனவுகளை பகுப்பாய்வு செய்கையில், வியாபார கொள்வனவுகளில் அதிகூடிய சதவீதம் கலை மற்றும் ஹைப்பணி துறைகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.





செலவின பகுப்பாய்வு

2020 ஆம் ஆண்டில் கொவிட் - 19 தொற்று நோய் நிலைமை காரணமாக நாடு முழுவதும் விதிக்கப்பட்ட நாட்டை முடக்கியதால் ரூபா 243 மில்லியன் வரை வரையறுக்கப்பட்டுள்ளதுடன், அது முன்னரான ஆண்டுடன் ஒப்பிடுகையில் 42% ஆன வீழ்ச்சியாகும்.

செலவினம்	2019	2020
நிருவாக செலவினம்	292,262,229	188,621,582
விநியோகச் செலவினம்	53,802,840	17,834,739
நிதிசார் செலவினம்	74,588,320	37,004,985
வரி	-	-
	420,653,389	***243,461,306***

பின்வரும் வரைப்படத்துடன் ஒப்பிடுகையில் மொத்த செலவினத்தின் கட்டமைப்பு பின்வருமாறாகும்.





செயலாற்றுகை ஆய்வு – 2020 ஆம் ஆண்டு

பின்னணி

இலங்கை கைப்பணிகள் சபை – லக்சலவின் 2020 ஆம் ஆண்டின் செயலாற்றுகை ஆய்வறிக்கையினை மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றேன். உள்நாட்டு கைப்பணிகள் உற்பத்தியாளர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தை வாய்ப்புகளை உருவாக்கும் நோக்கத்துடன், லக்சல நிறுவனம் 1964 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டதுடன், 1982 ஆம் ஆண்டு 35 ஆம் இலக்க தேசிய அருங்கலைகள் பேரவை மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் சட்டத்தின்கீழ் இலங்கை கைப்பணிகள் சபையாக அதனைத் தாபிக்கப்பட்டது. இத் துறையில் தற்போது லக்சல நிறுவனமானது அரசாங்கத்திற்குரிய மிக பழமையானதும் பெரியதுமான வலையமைப்பாகி உள்ளது.

மூலோபாய அணுகுமுறை

ஆரம்பிக்கப்பட்ட மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக தமது விற்றுமுதல், இலாபம் மற்றும் குறித்த துறையில் நிலையான நிலைப்பாட்டுக்கு தேவையானதும் அத்தியாவசியமானதுமான, வாடிக்கையாளர்களை மனம் கவரச் செய்தல் ஆகிய துறைகளை மேம்படுத்திக் கொண்டுள்ளதுடன், தேவைகளுக்கும் வேண்டுகோள்களுக்கும் பொருந்துகின்ற வகையில் மேற்கொண்ட நடவடிக்கைகளை மேலும் வலுவூட்டப்பட்டது. அதாவது,

- தமது சந்தைப்படுத்தல் பொருட்களின் வகுதிகளை விரிவாக்கப்பட்டு புதிய சந்தையினை அடைந்துக்கொள்ளுதல். (Category Expansion)
- தர அடையாளம் (Branding) செயன்முறை ஊடாக நிறுவனப் பெயரை சந்தையில் நிலைநாட்டுதல்
- வாடிக்கையாளர் நட்பு சேவைக்குத் தேவையான வகையில் ஊழியர்களிடையே ஆக்கபூர்வமான அணுகுமுறைகளை கட்டியெழுப்புதல்
- இணையத்தளம் ஊடாக லக்சல பொருட்களை கொள்வனவு செய்கின்ற வசதிகளை மேலும் விஸ்தரித்தல் (Online sales Facilities)
- இலங்கை சுற்றுலாச் சபை, இலங்கை சுற்றுலாத் துறை மேம்பாட்டு பணியகம் போன்ற நிறுவனங்கள் மற்றும் தனியார் சுற்றுலா நிறுவனங்களுடன் தொடர்ச்சியாக உறவை பராமரிப்பதன் மூலம், லக்சல காட்சிகூடங்களுக்கு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கச் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல்.

லக்சல வர்த்தகபெயரின் கீழ் அறிமுகப்படுத்திய லக்சல காட்சிகூடங்களில் சந்தைப்படுத்தப்படுகின்ற எல்லா பொருட்களின் வரம்புகளையும் மேலும் விரிவாக்கப்படுவதுடன், அவை தரமான மற்றும் உயர்தர பரிசுகளையும் நினைவுச்சின்னங்களையும் கொண்டதாக உள்நாட்டு வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கு இலகுவாக பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளையும் அத்துடன் விரிவாக்கப்படும். அதற்கமைவாக மிக உயர் தரத்திலான

நவீன வடிவமைப்புகளுடன் கூடிய சிறந்த பல பொருட்களை சந்தைப்படுத்தல் பொருட்டு காட்சிப்படுத்தப்பட்டன. மேலும், லக்சல இலங்கையின் பரிசு பொருட்களையும் நினைவுச் சின்னங்களையும் சந்தைப்படுத்தும் ஒரே அரசு மற்றும் பிரதான வர்த்தக நிறுவனமாக உள்நாட்டு வெளிநாட்டு வாடிக்கையாளர்களின் மனதில் நிலைநிறுத்துவதற்கு தேவையான சந்தைப்படுத்தல் பணிகளை விரிவாக்கப்பட்டு, வாடிக்கையாளர்களை நிறுவனத்தின் மீது ஈர்ப்பதற்கும் தக்கவைத்துக்கொள்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தரஅடையளாம் ஊடாக நிறுவனத்தின் பெயரை சந்தையினுள் நிலைப்படுத்தல்.

தற்கால சந்தையின் தேவைகளுக்கு ஏற்ப லக்சல தனது காட்சிகூடங்களை உயர் தரத்திற்கு கொண்டு வந்துள்ளது. அதற்கமைவாக லக்சல காட்சிகூடங்களை நவீனமயப்படுத்தி உள்நாட்டு வெளிநாட்டு வாடிக்கையாளர்களை ஈர்க்கும் வகையில் உயர் தரத்திலான வடிவமைப்புகளுடன், லக்சல வர்த்தக பெயரின் கீழ் உற்பத்திகளை அறிமுகப்படுத்தி பொருட்கள் காட்சிப்படுத்தலை உயர்மட்டத்தில் பராமரிப்பதற்கும், தரஅடையாளத்தின் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட விற்பனை இலக்குகளை அடைந்து கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஒரு நட்பு வாடிக்கையாளர் சேவைக்கு தேவையான வகையில் பணியாளர்களிடம் ஆக்கப்பூர்வமான உளப்பாங்கினை கட்டியெழுப்புதல்.

வாடிக்கையாளர்களின் தேவைகளை அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு நட்புடன் கூடிய சிறந்த சேவையினை வழங்குவதற்கும், புதிய சந்தைக்கு ஏற்ற வகையில் பணியாற்ற முடியுமான பணியாற்தொகுதியினரை பராமரித்துச் செல்வதற்கும் தேவையான பயிற்சி மற்றும் ஊக்கமளிப்புகள் வாயிலாக அவர்களின் வினைத்தறின் உயர்மட்டத்தில் பேணுவதற்கு பணியாற்றப்பட்டது. அதற்கமைவாக சம்பளம் மற்றும் கொடுப்பனவு என்பன அவர்களின் வினைத்திறன் மற்றும் விளைவுத்திறன் ஊடாக மேற்கொள்வதன்மூலம் அவர்களை ஊக்குவித்தலானது நிறுவனத்தின் அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு பெரும்பாலும் உதவியாக அமைந்தது.

உற்பத்திகளின் விரிவாக்கம்

புதிய மூலோபாய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிறுவனத்தின் பணிகள் மட்டுமல்லாது தமது வியாபார பொருட்களின் வகுதிகளையும் விரிவாக்குவதற்கு தேசிய வடிவமைப்பு நிலையம், தேசிய அருங்கலைகள் சபை மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களுடன் இணைந்து தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. உள்நாட்டு உற்பத்திகளின் தனித்துவத்தை பாதுகாத்துக்கொண்டு தற்கால சந்தையின் தேவைகளுக்கமைவாக புதிய படைப்புகளை உயர் தரத்துடன் நிருமாணிக்கப்பட்டு சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது மேலும், பரிசுப்பொருட்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் மட்டுமல்லாது இரத்தினக்கல்,

ஆபரணங்கள், தேயிலை, மசாலா பொருட்கள், தோல்பொருட்கள், மட்பாண்டங்கள் மற்றும் உள்நாட்டு முகமூடிகள் மற்றும் ஏனைய நினைவுப் பொருட்கள் அறிமுகப்படுத்தியதுடன், லக்சல புதிய படைப்புப் பிரிவு மூலமும் புதிய கைப்பணி உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதன் ஊடாக பரிசு பொருட்கள் மற்றும் நினைவுச்சின்னங்கள் துறையில் புதிய பல படைப்புகளை உருவாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

வலையமைப்பு

லக்சல வலையமைப்பு ஊடாக காட்சிக்கூடங்களில் விற்பனை செய்வதற்கு தேவையான பரிசுப் பொருட்கள் மற்றும் நினைவுச் சின்னங்களை கொள்வனவு செய்தல் போன்றே குறித்த பொருட்களின் திட்டமிடல், தரக் கட்டுப்பாடு மற்றும் நவீன வடிவமைப்புகளை வழங்குதலும் உள்ளடங்குகின்றது. 2020 ஆம் ஆண்டின் இறுதியில் முனைப்பான வழங்குநர்களின் எண்ணிக்கை 505 ஆகியதுடன், ஒட்டுமொத்த உள்நாட்டு கைப்பணியாளர்களின் எண்ணிக்கை இவ்வாண்டில் மேலும் விருத்தியடைந்துள்ளதுடன், புதிய சந்தை வாய்ப்புகளை அதிகரிக்கப்பட்டது. ஆகையால் இதன்மூலம் புதிய உற்பத்தியாளர்கள் இத் துறையை அணுகுவதற்கான வாய்ப்புகள் விரிவாக்கப்பட்டன.

நிருவாகம்

இலங்கை கைப்பணிகள் சபை – லக்சல நிறுவனம் அதன் முழுமொத்த தொழிற்பாட்டு செயற்பாடுகளுக்கு ஏற்புடையதான சட்ட திட்டங்கள், அரசாங்கத்தின் சுற்றறிக்கைகள் மற்றும் ஏனைய நிதி மற்றும் நிருவாக ஆலோசனைகளை பின்பற்றி தமது செயற்பாடுகளை நிறைவேற்றியுள்ளதுடன், நல்லாட்சி மற்றும் பெறுகை வழிகாட்டல்களை உரியவாறு பின்பற்றியுள்ளதாக சான்றுப்படுத்தப்படுகிறது. அமைப்பின் இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைந்துக்கொள்ளும்போதும் ஏனைய உதவி சேவைகளை வழங்கும்போதும் நிறுவனத்தின் நிருவாகம் மற்றும் மனிதவள பிரிவு என்பன முகாமைத்துவம் தொடர்பாக முக்கியமான கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றியுள்ளன. மீளாய்விற்கான ஆண்டில் நிறுவனத்தின் பதவியணி 123 பேர்களைக் கொண்டமைந்திருந்ததுடன், அது தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும்.

2020/12/31 அந் திகதியில் மொத்த பணியாற்தொகுதி

சிரேஷ்ட மட்டம்	08	
இடைநிலை மட்டம்	08	
மூன்றாம் நிலை மட்டம்	56	
ஆரம்ப மட்டம்	09	81
ஒப்பந்த பணியாற்தொகுதி		42
மொத்த எண்ணிக்கை		123

முன்னரான ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்விற்கான ஆண்டில் பணியாற்தொகுதியின் நிலைமை 129 தொடக்கம் 123 வரை குறைந்துள்ளதாக அறியலாம். போட்டியுடன்கூடிய விற்பனை சூழலில் சிறப்பான வகையில் தயாரிக்கப்பட்ட குறுகிய கால, இடைக்கால மற்றும் நீண்டகால வியாபார திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொருட்டான முயற்சியின்போது, நன்கு பயிற்சி பெற்ற, அர்ப்பணிப்பு மற்றும் வினைத்திறனுடன்கூடிய பணியாற்தொகுதியை கட்டியெழுப்புவதற்கு பாரிய பணியை ஆற்றப்படுகிறது.

சந்தைப்படுத்தல் பணியாற்தொகுதிக்கும் உதவி பணியாற்தொகுதிக்கும் மனம் கவரும் வகையிலான ஊக்குவிப்பு முறையினை அறிமுகப்படுத்துவதன்மூலமும் அவர்களுக்கு பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன்மூலமும் ஊழியர்களின் பண்புசார் தன்மை மற்றும் விளைவுத்திறன் என்பவற்றை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதற்கு மேலதிகமாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியுடன் நிறுவனத்தின் நிறுவனத்தின் தொழில்பாட்டு நடவடிக்கைகளுக்கு பொருந்துகின்ற வகையில் புதிய பணியாற்தொகுதியினரை அங்கிகரித்தக்கொள்வதற்கு வேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டு ஆரம்பம் தொடக்கம் நிலவிய கொவிட் 19 உலகளாவிய தொற்று நோய் நிலைமை மற்றும் பயணத்தடை காரணமாக, நாட்டுக்கு வருகை தருகின்ற வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை பெரும்பாலும் குறைவடைந்ததடன், அதன் காரணமாக திட்டமிடப்பட்டிருந்த சந்தைப்படுத்தல் இலக்குகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு சிரமமாகியதால் வருமானம் உருவாக்குவதற்கு முடியவில்லை.

ஆயினும் 2021 ஆம் ஆண்டில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை சிறப்பாக அமையும் என எதிர்பார்க்கப்படுவதால், புதிய திட்டத்தின் கீழ் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனைகளை மேலும் விருத்தி செய்வதற்கான அனைத்து உபாயமுறைகளையும் செயற்படுத்தி வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கை கைப்பணிச் சபை – லக்சல பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்

இலக்கம்	பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்கள்	நியமனக் காலப்பகதி	
		தொடக்கம்	வரை
01	திரு.ஜீ.டீ.எஸ்.பீ. குமார	29.08.2018	24.01.2020
02	கலாநிதி எம்.எச்.எம்.வசீர்	10.08.2018	03.01.2020
03	திரு.எம். நயனசந்திர	10.08.2018	03.01.2020
04	திரு.ஏ.ஏ.ஏ.ருவாயிஸ்	18.10.2018	03.01.2020
05	திரு.எச்.எம்.மொகமட் ருவாயித்	19.10.2018	03.01.2020
06	திருமதி அய்.ஜே. அபேரத்ன	30.04.2019	09.10.2020
07	திரு.சுஜிவ எஸ். பல்லியகுருகே *	31.12.2019	30.09.2020
08	ஜீ.பீ.எஸ்.எஸ். வீரசூரிய	03.01.2020	30.09.2020
09	திரு.சஜித் எம்.கொடிகார	03.01.2020	02.05.2023
10	திருமதி மதுமாலி அல்விஸ் (சட்டத்தரணி)	03.01.2020	02.05.2023
11	திரு.கே.எல். மகிந்த சமரதுங்க	03.01.2020	09.01.2023
12	திருமதி.என்.பீ.ஏ.ஆர்.ஜயவர்தன	24.01.2020	02.03.2022
13	திருமதி.ஜே கிருஷ்ணமூர்த்தி	24.01.2020	09.10.2020
14	திரு.டீ.ஜீவநாதன்	09.10.2020	தற்கால
15	திரு.ப்ரதீப் குணவர்தன *	12.10.2020	07.05.2021
16	திரு.லக்மால் விக்கிரமஆரச்சி * (சட்டத்தரணி)	11.11.2020	23.12.2022

*** பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் இலங்கை கைப்பணிச் சபை – லக்சல தலைவராகவும் செயலாற்றியுள்ளனர்.**

இலங்கை கைப்பணிகள் சபை – லக்சல

சிரேட்ட முகாமைத்துவ குழு

திரு.மதுரத சில்வா	பணிப்பாளர் நாயகம்/பிரதான நிறைவேற்று அதிகாரி
திரு.சீ.என்.தஹநாயக்க	பணிப்பாளர் (மனித வளங்கள்/நிருவாகம்)
திரு.கே.பீ.பீ.எஸ்.கே.பத்திரண	பிரதான உள்ளக கணக்காய்வாளர்
திரு.கே.சீ.ஜயவர்தன	பணிப்பாளர் விற்பனை
திரு. ஈ.எலன் தெலில்கன்	பதில் கடமையாற்றும் பணிப்பாளர் (நிதி)
திரு.சம்பத் செனெவிரத்ன	பதில் கடமையாற்றும் பணிப்பாளர் (வழங்கல் வலையமைப்பு அபிவிருத்தி)
திருமதி வஜிரா சமரரத்ன	பிரதி பணிப்பாளர் (பெறுகை)
திருமதி தேவிகா குமாரி அத்துகோரள	பிரதி பணிப்பாளர் (விநியோகம்)
திரு.ஏ.எல்.எம்.ரிஸ்வான்	உதவிப் பணிப்பாளர் (வருமானம் மற்றும் செலவினம்)
திரு.கயான் லியனகே	ப.க. உதவிப் பணிப்பாளர் (மனித வளங்கள் மற்றும் நிருவாகம்)
திரு.தினேஷ் அபேகோன்	தகவல் தொல்நுட்ப பிரிவின் தலைவர்

எமது நன்றி

எல்லாவற்றுக்கும் முதலாக நான் லக்சல நிறுவனம் சார்பாக, இலங்கை சனநாயக, சோசலிசக் குடியரசின் மேண்மைதங்கிய சனாதிபதி அவர்களுக்கும், கௌரவ பிரதம அமைச்சர் அவர்களுக்கும், கௌரவ கைத்தொழில் மற்றும் வர்த்தக நடவடிக்கைகள், நீண்டகாலம் இடம் பெயர்ந்தவர்களை மீள குடியமர்த்தல், கூட்டுறவு அபிவிருத்தி, தொழில்சார் பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர் அவர்களுக்கும் பிரதி அமைச்சர் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். எமது நிறுவனம் இத் துறையில் உயர்ந்த நிலையினை எட்டுவதற்காக எப்போதும் தேவையான தீர்மானங்கள் மற்றும் முடிவுகள் வழங்குதல் தொடர்பில் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், தேவையான எல்லா சந்தர்ப்பங்களிலும் எமது நிறுவனத்தின் முன்னேற்றம் கருதி வழங்கிய ஒத்துழைப்பு பொருட்டு நான் எமது அமைச்சின் செயலாளருக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

நிறுவனத்தின் நிருவாக, நிதி மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை மிக நன்றாக நிறைவேற்றும் வகையில், தமது பணியாற்தொகுதியினரை சிறந்த முறையில் வழிநடாத்திய அனைத்து பிரிவுகளின் தலைவர்களுக்கும், நிறுவனத்தின் நடவடிக்கைகளை வினைத்திறனாகவும் பயனுள்ளதாகவும் பேணிச் செல்வதற்கு பங்களிப்பு வழங்கிய ஏனைய ஒட்டுமொத்த பணியாற்தொகுதியினருக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

எம்முடன் இணைந்துக்கொண்டு வாடிக்கையாளர்களின் தேவைகளை சரியாக அடையாளம் காணப்பட்டு, புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்தியும், சம்பிரதாய மற்றும் புதிய உற்பத்திகள் அடங்கலாக கைப்பணி மற்றும் நினைவு பொருட்களை வழங்கியும் எம்முடன் இணைந்துக்கொண்ட உற்பத்தியாளர்களுக்கு இதன் போது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோன்று ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எமது நிறுவனத்தின்மீது நம்பிக்கை வைத்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கும் எமது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

2020 ஆம் ஆண்டில் ஆரம்பம் தொடக்கம் நிலவிய கொவிட் 19 உலகளாவிய தொற்று நோய் நிலைமை காரணமாக நாட்டை முடக்குதல் மற்றும் பயணத்தடை காரணமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாத்துறையினர் வருகைத் தராமை காரணமாக, நிறுவனத்தின் விற்பனை வருமானம் துரிதமாக வீழ்ச்சியடைந்தது. ஆகையால் சந்தைப்படுத்தல் இலக்குகளை அடைவதற்கு இவ்வாண்டில் இயலாது போயினும், 2021 ஆம் ஆண்டில் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனைகளை மேலும் விருத்தி செய்வதற்கு தேவையான நிபுணத்துவ சேவைகளை பெற்றுக்கொண்டு நிறுவனத்தின் சந்தைப்படுத்தலை விரிவாக்குவதற்கு எதிர் பார்க்கின்றேன்.

எதிர் காலத்தில் இலங்கையின் கிராமிய பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்கும், கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எமது நிறுவனம்மூலம் மேற்கொள்ளப்படும் என்பதை அறிய தருவதுடன், எதிர்வரும் ஆண்டுகளில் எமது விற்பனை ரூபா.பில்லியன் வரை விருத்தி செய்வதற்கு எதிர் பார்க்கப்படுவதாகவும் இறுதியாக கூறுகின்றேன்.

மேலும், நிறுவனத்தின் மனித வளங்கள் மற்றும் பௌதீக வளங்கள் என்பவற்றை முறையாக முகாமைத்துவம் செய்வதன்ஊடாக ஒட்டுமொத்த பணியாற்தொகுதியிலும் வினைத்திறன் மற்றும் பயனுள்ள பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட முலோபய திட்டத்தின் பிரகாரம், நிறுவனத்தின் பொது செய்றபாடுகளின் செலவுகளை கவனத்தில் கொள்ளக் கூடிய வகையில் குறைத்து 2021 ஆம் ஆண்டில் எமது இலாப சதவீதம் விருத்தியடைகின்ற நிலையில் பேணிச் செல்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

தலைவர்,

இலங்கை கைப்பணிகள் சபை – லக்சல



இலங்கை கைப்பணிகள் சபை

நிதிக் கூற்றுகள்

2020 திசெம்பர் 31

இலங்கை கைப்பணிகள் சபை

விரிவான வருமானம் தொடர்பான கூற்று

2020 திசெம்பர் 31 இல் முடிவடையும் ஆண்டுக்காக

	குறிப்புகள்	2020 ரூபா	2019 ரூபா
வருமானம்	**3**	194,740,004	617,296,345
விற்பனை விலை		(85,307,833)	(258,401,407)
மொத்த இலாபம்		**109,432,171**	**358,894,938**
கிடைக்கப்பெற்றுள்ள நன்கொடை		21,466,252	150,000,000
ஏனைய வருமானம்	**4**	6,818,812	10,806,240
நிருவாக செலவினம்	**5**	(188,621,582)	(292,262,229)
விநியோகச் செலவினம்	**6**	(17,834,739)	(53,802,840)
தொழில்பாட்டு செயற்பாடுகளிலிருந்து விளைவுகள்		**(68,739,086)**	**173,636,109**
நிதிசார் செலவினம்	**7**	(37,004,985)	(74,588,320)
வரிக்கு முன்னரான இலாபம்		**(105,744,071)**	**99,047,789**
வரி	**8**	-	-
ஆண்டுக்கான இலாபம்		**(105,744,071)**	**99,047,789**

இலங்கை கைப்பணிகள் சபை
நிதி நிலைமை தொடர்பான கூற்று
2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக

	குறிப்பு	2020 ரூபா	2019 ரூபா
சொத்துக்கள்			
நடைமுறையல்லாத சொத்துக்கள்			
சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்	09	**897,120,392**	947,265,898
மொத்த நடைமுறையல்லாத சொத்துக்கள்		**897,120,392**	**947,265,898**
நடைமுறை சொத்துக்கள்			
இருப்பு	10	**619,209,585**	637,430,580
வியாபார மற்றும் ஏனைய கிடைக்கப்பெற வேண்டியவைகள்	11	**71,085,017**	86,360,169
காசு மற்றும் காசுக்கு சமமானவைகள்	12	**28,002,906**	28,929,936
மொத்த நடைமுறை சொத்துக்கள்		**718,297,508**	**752,720,685**
மொத்த சொத்துக்கள்		**1,615,417,900**	**1,699,986,583**
உரித்துகள் மற்றும் பொறுப்புகள்			
உரித்துகள்			
வெளியிடப்பட்ட மூலதனம்		**69,628,878**	69,628,878
மூலதன ஒதுக்கங்கள்		**510,806**	510,806
மீள் கணிப்பீட்டு ஒதுக்கங்கள்		**454,366,157**	454,366,157
மூலதன அளிப்புகள்		**107,951,172**	107,951,172
பிடித்து வைத்துக் கொள்ளப்பட்ட உழைப்புகள்		**(125,845,784)**	(18,714,487)
மொத்த உரித்துகள்		**506,611,229**	**613,742,527**
நடைமுறையல்லாத பொறுப்புகள்			
ஓய்வூதிய நலன்களின் பொறுப்புகள்	13	**56,203,979**	50,896,038
பிற்போடப்பட்ட வருமானம்	14	**49,504,712**	74,844,712
நீண்டகால கடன்	15	**385,279,409**	388,650,929
மொத்த நடைமுறையல்லாத பொறுப்புகள்		**490,988,100**	**514,391,679**
நடைமுறை பொறுப்புகள்			
வியாபார மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டியவைகள்	16	**522,556,559**	496,996,396
செலுத்தப்பட வேண்டிய வருமான வரி	8	**20,811,536**	25,459,280
குறுகிய கால கடன்	17	**69,096,784**	43,076,000
வங்கி மேலதிக பற்று	18	**5,353,692**	6,320,701
மொத்த நடைமுறைப் பொறுப்புகள்		**617,818,571**	**571,852,377**
மொத்த பொறுப்புகள்		**1,108,806,671**	**1,086,244,056**
மொத்த உரித்துகள் மற்றும் பொறுப்புகள்		**1,615,417,900**	**1,699,986,583**

.....

திரு.ஈ.ஏ.டெலிகன்
பணிப்பாளர் (நிதி) (ப.க)

கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுகளில் கட்டாயமான அம்சமாகும். இந்த நிதிக் கூற்றுகளை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பில் பணிப்பாளர் சபை பொறுப்பு கூறுகின்றது. பணிப்பாளர் சபையால் நிதிக் கூற்றுகள் அங்கீகரிக்கப்பட்டதுடன், அவர்களின் பொருட்டு 24/01/2022 ஆந் திகதி லக்சல, தும்முல்லவில் நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் கையொப்பமிடப்பட்டது.

திரு.எஸ்.எம்.கொடிகார	திருமதி.எஸ.ப.ஏ.ஆர.ஜயவர்தன	திரு.லக்மால் விக்கிரமாரச்சி
சபை உறுப்பினர்	**சபை உறுப்பினர்**	**தவிசாளர்**

பக்க இலக்கம் 09 தொடக்கம் 28 வரையிலான குறிப்புகள் இந்த நிதிக் கூற்றில் கட்டாயமான அம்சமாகும். அடைப்புக் குறிக்குள் குறிப்பிடப்பட்டுள்ள எண்களின் மூலம் கழித்தல்கள் காட்டப்படுகின்றன.

இலங்கை கைப்பணிகள் சபை
2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக
உரித்துகள் மாற்றமடைதல் தொடர்பான கூற்று

	வெளியிடப்பட்ட மூலதனம்	மூலதன ஒதுக்கங்கள்	மீள்கணிப்பீட்டு ஒதுக்கங்கள்	மூலதன அளிப்புகள்	பிடித்து வைத்துக் கொள்ளப்பட்ட உழைப்புகள்	மொத்த உரித்துகள்
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
2019 சனவரி 01 ஆந் திகதியில் மீதி	69,628,878	510,806	454,366,157	107,951,172	(172,251,065)	**460,205,948**
முன்னரான ஆண்டின் பிழைகளுக்கான சீராக்கங்கள்	-	-	-	-	54,488,789	**54,488,789**
ஆண்டுக்கான இலாபம்					99,047,789	**99,047,789**
2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் மீதி	**69,628,878**	**510,806**	**454,366,157**	**107,951,172**	**(18,714,487)**	**613,742,526**
முன்னரான ஆண்டின் பிழைகளுக்கான சீராக்கங்கள்					(1,387,226)	**(1,387,226)**
ஆண்டுக்கான இலாபம்	-	-	-		(105,744,071)	**(105,744,071)**
2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் மீதி	**69,628,878**	**510,806**	**454,366,157**	**107,951,172**	**(125,845,784)**	**506,611,229**

	குறிப்புகள்	2020	2019
தொழில்பாட்டு செயற்பாடுகளிலிருந்து உற்பத்தியாகிய காசுப் பாய்ச்சல்கள்		**ரூபா**	**ரூ.**
வரிக்கு முன்னரான இலாபம்		**(105,744,071)**	**99,047,789**
சீராக்கல்			
சொத்துக்களை அகற்றும் வருமானம்		-	(127,716)
சுயவிருப்ப ஓய்வூதிய திட்டத்தின்கீழ் கடன் தீர்ப்பு கட்டணங்கள்VRS		-	2,465,874
ஓய்வூதிய நலன்களின் பிணைப்புகள்		7,129,839	6,964,310
வட்டி செலவினம்		36,856,652	74,236,920
தேய்மானம்		26,414,467	25,928,260
மூலதன செலவினத்தின் கடன் தீர்ப்பு செய்தல்		25,600,365	25,340,000
முன்னரான ஆண்டின் சீராக்கல்		(1,387,226)	(77,794,472)
கடன் தீர்ப்பு அளிப்புகள்		(25,340,000)	(25,340,000)
		(36,469,974)	**130,720,965**
செயற்பாட்டு மூலதனத்தின் மாற்றங்கள்			
இருப்புகள்		18,220,995	(41,763,042)
வியாபாரம் மற்றும் ஏனைய கிடைக்கப்பெற வேண்டியவைகள்		15,275,152	19,892,872
வியாபாரம் மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டியவைகள் (வரிகளுடன்)		20,912,419	(11,905,275)
தொழில்பாட்டு செயற்பாடுகளிலிருந்து உற்பத்தி செய்த காசுப் பாய்ச்சல்		**17,938,592**	**96,945,520**
செலுத்தப்பட்ட பணிக்கொடை		(1,821,898)	(573,540)
செலுத்தப்பட்ட வட்டி		(36,856,652)	(74,236,920)
தொழில்பாட்டு செயற்பாடுகளிலிருந்து உற்பத்தியாகிய தேறிய காசுப் பாய்ச்சல் கூற்று		**(20,739,958)**	**22,135,060**
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உற்பத்தியாகிய காசுப் பாய்ச்சல் கூற்று			
சொத்துக்கள் அகற்றல் வருமானம்		-	164,256
சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்தல்		(1,869,331)	(6,665,294)
முதலீட்டு செயற்பாடுகளின் பொருட்டு செலவிடப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல்		**(1,869,331)**	**(6,501,038)**
நிதி செயற்பாடுகளில் இருந்து உற்பத்தியாகிய காசுப் பாய்ச்சல்			
நீண்டகால / குறுகியகால கடன் எடுத்தல்		26,707,791	273,000,000
கடன் மீள செலுத்தல்		(4,058,524)	(274,585,083)
நிதி செயற்பாடுகளுக்கு செலவிடப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல்		**22,649,267**	**(1,585,083)**
காசும் காசுக்கு சமமானவைகளின் தேறிய அதிகரிப்பும்/குறைவடைதலும்)		**39,979**	**14,048,939**
ஆண்டு ஆரம்பத்தின் காசும் காசுக்கு சமமானவைகளும்		22,609,235	8,560,296
ஆண்டு இறுதியில் காசும் காசுக்கு சமமானவைகளும்		**22,649,214**	**22,609,235**
வங்கி மேலதிக பற்று	**18**	(5,353,692)	(6,320,701)
கையிருப்பு மற்றும் வங்கியில் உள்ள பணம்	**11**	28,002,906	28,929,936
		22,649,214	**22,609,235**

இலங்கை கைப்பணிகள் சபை
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

1. நிறுவனத் தகவல்கள்

1.0 கம்பனி

"லக்சல" எனும் வர்த்தக குறியீட்டின் கீழ் பிரபல்யமடைந்து செயற்பட்டுவரும் இலங்கை கைப்பணிகள் சபை ("இலங்கை கைப்பணிகள் சபை" (SLHB) அல்லது "லக்சல") இலங்கை முழுவதும் தயாரிக்கப்படுகின்ற கைப்பணிப் பொருட்களை விற்பனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபடும் ஒன்றே ஒரு அரச நிறுவனமாகும்.

1.1 பிரதான நடவடிக்கைகள் மற்றும் தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் இயல்பு

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைக்கு பரிசுப் பொருட்களையும் நினைவுப் பொருட்களையும் விற்பனை செய்தல், சபையின் பிரதான தொழில்பாடு ஆகும்.

2. பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்

2.0 அளவீடுகளின் அடிப்படை

சபையின் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான நிதி நிலைமை தொடர்பான கூற்று, விரிவான வருமானக் கூற்று, பங்கு முதலீடுகளின் மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுடன் கணக்கீட்டு கொள்கை கூற்றுகள் என்பன, இலங்கைப் பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு (SLFRSs) ஏற்புடையதாக தயாரிக்கப்பட்டுள்ளன.

பொதுவான மதிப்பின் பிரகாரம் அளவீடு செய்யப்படும் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தவிர்ந்த, இந்த நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுச் செலவை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன. இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கமைவாக, நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு சில தீர்க்கமான கணக்கீட்டு மதிப்பீடுகளை பயன்படுத்தல் அவசியமாகும். அனைத்து பெறுமதிகளும் இலங்கை ரூபாக்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2.1 கணக்கீட்டு மதிப்பீடுகள், கருதுகோள்கள் மற்றும் முடிவுகளை செயற்படுத்தல்

கொள்கைகள் மற்றும் பதிவு செய்யப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் பெறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினக் கூற்று. கொள்கைகளை ஏற்புடையதாக கொள்வதற்கு ஏதுவாக அமைகின்ற தீர்மானங்கள், மதிப்பீடுகள்

மற்றும் கருதுகோள்களைக் கட்டியெழுப்புவதற்கு தேவையான நிதிக் கூற்றுகளைத் தயாரித்தல், LKAS (இலங்கை கணக்கீட்டு நியமங்கள்) மற்றும் SLFRS இற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் நிலவிய சந்தர்ப்ப சூழ்நிலைகளின் கீழ் நியாயமானதென நம்பிக்கை கொள்ளும் வரலாற்று ரீதியான அனுபவங்கள் மற்றும் பல்வேறுபட்ட காரணிகள் மீது அமைந்துள்ளது. அதன் பெறுபேறுகள் ஏனைய மூலாதாரங்களிலிருந்து தெளிவாக மாறுபடாத சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை முன்னெடுத்துச் செல்லும் பெறுமாணங்கள் மீது தீர்மானமெடுக்கும் அடிப்படையில் அமைக்கப்படுகின்றது. உண்மையான பெறுபேறுகள் இந்த மதிப்பீடுகளிலிருந்து மாறுபடக்கூடும். மதிப்பீடுகள் மற்றும் விசேட கருதுகோள்கள் நிலவும் அடிப்படையின் மீது மீளாய்வு செய்யப்படும். மதிப்பீடுகள், கணக்கு வைக்கும் திருத்தங்கள் என்பன மதிப்பீடுகள் திருத்தப்படும் போது இனம் காணப்படும். அவ்வாறு செய்வதன் மூலம் அத்தகைய திருத்தங்கள் குறிப்பிட்ட காலத்திற்கு அல்லது திருத்தப்படும் காலத்திற்கு மாத்திரம் தாக்கத்தைச் செலுத்தக்கூடியதாக இருப்பின் மட்டுமே அத் திருத்தம் நிகழ்காலத்திற்கும் எதிர்காலத்திற்கு தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும்.

2.2 நிலையானயான இறுப்பை நிச்சயித்தல்

நிதிக் கூற்றுக்களை தயாரிக்கின்ற போது எதிர்காலத்தின் நிலையான இருப்பை மேன்மேலும் தக்கவைத்துக் கொள்வதற்கு சபையினது சொத்துக்களின் மதிப்பீடொன்று எம்மால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எதிர்கால தகவல்கள் அனைத்தையும் கருத்திற்கொள்ளும் போது வியாபாரத்தை மூடிவிடுவதற்கோ நிறுத்துவதற்கோ நாம் எதிர்வுகூறமாட்டோம்.

2.3 ஒப்புநோக்கப்பட்ட தகவல்கள்

சபையினால் கணக்கீட்டுக் கொள்கைகள் தொடர்ச்சியான முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு, முன்னைய ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்ட கொள்கைகளுக்கும் ஏற்புடையதாவதுடன், அவற்றை நியாயமாக முன்வைப்பதற்கு தேவையான சந்தர்ப்பங்களில் மீள்வகையீடு செய்யப்பட்டுள்ளன.

2.4 விசேட கணக்கியல் கொள்கைகள் தொடர்பான பொழிப்பு

பின்வரும் கணக்கியல் கொள்கைகள் இந்த நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்படும் எல்லா காலவெல்லைகளுக்கும் தொடர்ச்சியாக இயைபுடையதாக்கிக் கொள்ளப்பட்டுள்ளதோடு அவற்றை பணிப்பாளர் சபையினாலும் மிக சாமர்த்தியமாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

2.4.1 வருமானம் இனம்காணல்

பொருளாதார நலன்கள் வியாபார நிறுவனத்தை நோக்கி வரும்

மற்றும் பொருட்கள் மீண்டுவரும் அறிக்கைகள் நம்பிக்கையாக மதிப்பீடு செய்ய முடியுமான சந்தர்ப்பத்தில் மற்றும் பொருட்கள் தொடர்பாக தொடர்ச்சியான முகாமைத்துவ தலையீடு இல்லாத போது வருமானம் அடையாளம் காணப்படும். ஆபத்துக்கள் மற்றும் நன்மைகளைப் பொறுப்பளித்தல் விற்பனை ஒப்பந்தத்தின் ஒவ்வொரு நிபந்தனைகளின் மீதும் தங்கி நின்று மாறுபடுகின்றது.

ஏனைய தொழில்பாட்டு வருமானம்

(அ) சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் இலாப நட்டங்கள்

(ஆ) சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் அகற்றுதல் மற்றும் நீக்குவதன் மூலம் கிடைக்கும் இலாபம் அல்லது நட்டங்கள் ஏற்புடைய விற்பனை நிகழும் காலப்பிரிவில் இனம்காணப்படுவதோடு அவை ஏனைய செயற்பாட்டு வருமானங்களாக வகைபடுத்தப்பட்டுள்ளன.

கிடைக்கப்பெற்ற கொடைகள்

அரசாங்கத்தினால் வழங்கப்படும் கொடைகள் செலவின விடயத்திற்கு ஏற்புடையதாயின் அது செலவை சீராக்கம் செய்வதற்கு தேவையான காலப்பகுதியில் இழப்பீடு வழங்கப்படும் என்ற அடிப்படையில் இனம்காணப்படும். ஏற்புடைய கொடை சொத்தொன்றுடன் தொடர்புபடுமாயின் சாதாரண பெறுமதி பின்போடப்பட்ட வருமானக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு ஏற்புடைய சொத்தின் உத்தேச நடைமுறைக்கேற்ற ஆயுட்காலம் பூராகவும் சமமான தவணைக் கட்டணங்களில் வருமானக் கூற்றிற்கு செலுத்தப்படும்.

கிடைக்கப்பெற்ற மூலதனக் கொடைகள்

கிடைக்கப்பெற்ற மூலதனக் கொடைகள் பின்போடப்பட்ட வருமானங்களாக இனம்காணப்பட்டுள்ளதோடு 10 வருட காலப் பிரிவு பூராவும் கடன்தீர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

கிடைக்கப்பெற்ற மீண்டுவரும் கொடைகள்

வருமானம் மற்றும் ஏற்புடைய கொடைகள் ‘‘வேறு வருமானங்களாக’’ தனித்தனியாக அறிக்கையிடுவதற்கு அல்லது ஏற்புடைய வருமானங்கள் மூலம் அறவீடு செய்வதற்கும் முடியும்.

எனவும். அந்த வருமானம் நம்பிக்கைத் தரக்கூடிய வகையில் அளவீடு செய்ய முடியும் எனவும் கருத்திற்கொண்டு வருமானம் இணங்காணப்படுகின்றது. பெறப்பட்ட அல்லது வருமதியாக உள்ள தொகை அடிப்படையில் சாதாரணப் பெறுமதிக்கு வருமானம் மதிப்பீடு செய்யப்படுகின்றது. அன்றேல் அது வியாபாரக் கழிவுகள் மற்றும் ஏற்புடைய வரி சேர்க்கப்படாத கிடைக்க வேண்டிய வருமதிகள் என கணக்கிடப்படும்.

வெளிநாட்டு நாணயங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் கட்டுப்படுத்தப்படும் நாணயமாற்றுக் கொள்கையின் அடிப்படையில் மாற்றப்படும்.

ஐந்தொகை தினத்தில் வெளிநாட்டு நாணயங்கள் அடிப்படையில் வகையீடு செய்யப்படும் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக அன்றைய தினத்தில் காணப்படும் நாணய மாற்று வீதத்தின் கீழ் இலங்கை ரூபாய்களுக்கு மாற்றீடு செய்யப்படும்.

2.4.2 சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

(அ) **அடையாளம்காணல் மற்றும் அளவிடுதல்**

சொத்துக்கள் சார்ந்த எதிர்கால பொருளாதார நலன்கள் கம்பனியை நோக்கி வரும் என அனுமானித்து மற்றும் சொத்துக்களின் செலவினத்தை நம்பிக்கையுடன் அளவிட முடியும் என்றிருப்பின் மாத்திரம் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் பொறிகளை இனம்காணும் செயன்முறை ஏற்றுக்கொள்ளப்படும்.

காணிகள் தவிர்ந்த சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் திரண்ட தேய்மானம் மற்றும் திரண்ட குறைபாடுகளின் நட்டங்கள் கழிக்கப்பட்ட செலவுகளின் பெறுமதிக்கு குறிப்பிடப்பட்டுள்ளது. சொத்துக்களை கைப்பற்றல் தொடர்பான நேரடியாக பிரயோகிக்க முடியுமான செலவுகளுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது. செலவுப் பொருட்கள், நேரடி, உழைப்பு மற்றும் எதிர்பார்க்கப்படும் உபயோகத்திற்காக ஏதேனும் சாதகமான நிலமைக்கு சொத்துக்களை கொண்டு செல்வதற்கு நேரடியாக பிரயோகிக்க முடியுமான ஏதேனும் செலவு மற்றும் அவ்வாறான சொத்துக்கள் நிலைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்தளத்தில் உள்ள பொருட்கள் எதனையும் கலற்றி பாகப்படுத்தல் அல்லது அகற்றல் அல்லது அவற்றை மீள்நிலைப்படுத்தல் செலவுகள் சுய நிர்ணய சொத்துக்களுக்குள் அடங்கும்.

சொத்துகள், உபகரணங்கள் மற்றும் பொறிகள் என்பவற்றுடன்

தொடர்புபட்ட ஏதேனுதொரு பொருள் வெவ்வேறான பிரயோசனங்கள் அடிப்படையில் அவற்றின் ஆயுட்காலம் பிரதான பாகங்களோடு தொடர்புபடுகின்ற போது அவை தனியான சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்ற அடிப்படையில் கணக்கிடப்படும்.

சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் முன்கொண்டு செல்லப்படும் பெறுமதி ஏதேனும் நிகழ்வுகள் அல்லது மறைமுகமான காரணிகளின் வித்தியாசங்களுக்கு அமைய மீண்டும் அறவீடு செய்ய முடியாதென தெளிவாகும் போது அந்த சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் முன்கொண்டு செல்லப்பட்ட பெறுமதி பலவீனமாகக் கருதி மீளாய்வுக்கு உட்படுத்தப்படும்.

சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் அகற்றலின் போது கிடைக்கப்பெறும் இலாபம் அல்லது நட்டம் அத்தகைய சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்வற்றுக்கு ஏற்புடைய முன்கொண்டு செல்லப்படும் பெறுமதி மற்றும் அதன் அகற்றலின் மீது பணத்தொகையுடன் சீறாக்கம் செய்து உறுதிப்படுத்திக் கொள்வதோடு அவை விரிவான வருமான கூற்றில் அடையாளம் காணப்படும்.

(ஆ) தேய்மானம்

தேய்மானத்திற்கான ஒதுக்கீடுகள் கணக்கிடப்படுவது, ஏற்புடைய கணக்கு பெறுமதிகள் அவற்றின் மதிப்பீடு செய்யப்பட்ட ஆயுட்காலம் முழுவதையும் பதிவழிக்கும் நோக்கத்துடன் சொந்தமான காணிகள் தவிர்ந்த ஏனைய சகல சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் செலவுகளின் மீது இலகு நேர்கோட்டு வழிமுறையை கையாண்டேயாகும்.

பயன்படுத்தப்பட்ட பிரதான வருடாந்த வீத அளவுகள் பின்வருமாறு

1.	கட்டிடம்	2.5%
2.	இயந்திரங்களும் உபகரணங்களும்	10%
3.	பதியப்பட்டுள்ள பொருட்கள்	10%
4.	தளபாடங்களும் பொருத்திகளும்	10%
5.	கணினி வன் பொருட்கள் மற்றும் உபகரணங்கள்	20%

- 2018 ஆம் ஆண்டு வரை கணினி உருப்படிகளின் தேய்மானம் இலகு நேர் கோட்டு முறை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டது. ஆயினும் இந்த உருப்படிகள் 08 ஆண்டுகளுக்கு முன்பாக

கொள்வனவு செய்துள்ளதால் இலகு நேர் கோட்டு முறை கணக்கிடுகையில் தேய்மானத்தின் பெறுமதி, சேர்க்கப்பட்ட மொத்த பெறுமதி விஞ்சி செல்வதால் 2019 ஆம் ஆண்டில் குறைந்து செல்லும் முறையை லக்சல பயன்படுத்த நேரிட்டது.

(இ) **சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை விற்பனை செய்ததன் மூலம் கிடைக்கப்பெற்ற இலாபம் / நட்டம்**

சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களை அகற்றுதல் மூலம் கிடைக்கப்பெறும் இலாபம்/நட்டம் என்பவற்றை ஏற்புடைய விற்பனை நிகழும் காலப்பிரிவில் இனங்காணப் படுவதோடு வேறு செயற்பாட்டு வருமானங்களின் கீழ் வகையீடு செய்யப்படும்.

2.4.3 மேற்கொள்கின்ற மூலதன வேலைகள்

வருடத்திற்குள் பூரணப்படுத்தாத மூலதன செலவுகள் முற்பண கொடுப்பனவுகளாக குறிப்பிடப்படுவதோடு, வருடத்தினுள் நிறைவு செய்யப்பட்ட பயன்பாட்டுக்கு எடுத்துக்கொண்ட மூலதனச் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் கணக்கிற்கு மாற்றப்படும்.

2.4.4 புலனாகாத சொத்துக்கள்

SLHB சபையினால் கையகப்படுத்திய பிரயோசனமான நிலையான ஆயுட் காலத்தைக் கொண்ட புலனாகாத சொத்துக்கள், ஒன்றுதிரட்டப்பட்ட கடன்தீர்ப்பு மற்றும் ஒன்றுதிரட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் நட்டங்களுக்கான செலவுகளின் மீது அளவிடப்படும்.

(அ) அடையாளம் காணும் அடிப்படை

புலனாகாத சொத்துக்களை சொத்துக்களுக்காக பிரயோகிக்க முடியுமான எதிர்கால பொருளாதார நலன்கள் வியாபார நிறுவனங்களுக்கு பாய்ச்சப்படும் என்றும் ஏற்புடைய செலவுகள் திரண்ட குறைபாடுகள், நட்டங்கள் குறை செலவுகள் மீது நம்பிக்கையாக அளவீடு செய்து முன்னெடுத்துச் செல்ல முடியுமென அனுமானிக்கும் சந்தர்ப்பங்களிலுமே அடையாளம் காணப்படுகின்றன.

(ஆ) பிந்திய செலவுகள்

காலம் கடந்த செலவுகள் மற்றும் குறிப்பிட்ட சொத்துக்களின் எதிர்கால பொருளாதார நன்மைகள் அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் ஏற்புடைய பிந்திய செலவுகள் மூலதனமாக்கப்படுகின்றன. உள்ளக ரீதியாக ஏற்படுத்தப்படும்

நற்பெயருக்கு மற்றும் மதிப்புக்கு ஏற்புடைய செலவுகளும் உட்பட பிற அனைத்து செலவுகளும் செய்யப்படும் எனும் கருதுகோளின் அடிப்படையில் வருமானக் கூற்றில் அடையாளம் காணப்படுகின்றது.

(இ) நீக்கல் மற்றும் அகற்றுதல்

புலனாகாத சொத்துக்களை அகற்றும் போது அல்லது பாவனையின் பின்னர் அகற்றும் போது எதிர்கால பொருளாதார நன்மை கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லாத போது அவை புலனாகாத சொத்துக்கள் என அடையாளம் காணப்படும்.

(ஈ) கடன் தீர்ப்புச் செய்தல்

புலனாகாத சொத்துக்கள், அவை பாவனைக்கு எடுக்கப்பட்ட தினத்திலிருந்து அவற்றின் மதிப்பீட்டு பிரயோசனமுள்ள ஆயுட் காலத்திற்குள் எளிய நேர்கோட்டு வழிமுறைக்கு அமைய வருமான கூற்றுக்குள் அடையாளம் காணப்படும்.

2.4.5 பலவீனங்கள்

சபைக்குள்ள சொத்துக்களை முன்னெடுத்துச் செல்லும் கணக்கு அளவுகள், ஏதேனும் சொத்தில் (SLHB) பலவீனம் அவதானிக்கப்படுகின்றதா என்பதை தீர்மானிப்பதற்கு ஒவ்வொரு ஐந்தொகை தினத்திலும் மீளாய்வு செய்யப்படும். அவ்வாறான பலவீனங்கள் தென்படுமாயின் ஏற்புடைய சொத்திலிருந்து மீள அறவிடமுடியுமான பெறுமதியை மதிப்பீடு செய்யப்படும். ஏதேனும் பலவீன நட்டமொன்று அவதானிக்கப்படுவது ஏதேனும் சொத்தின் கொள்ளளவு பெறுமதி அல்லது அதன் பண உற்பத்தி பிரிவை மீண்டும் அறவிடுவதற்கு முடியுமான பெறுமதியை விஞ்சும் போதாகும். பலவீனங்கள் நட்ட வருமானக் கூற்றில் அடையாளம் காணப்படும்.

2.4.6 வியாபார மற்றும் வேறு வருமதிகள்

வர்த்தக மற்றும் வேறு வருமதிகள் பொதுவான வியாபார காலத்திற்குள் வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் அல்லது அவர்கள் சார்பில் மேற்கொள்ளப்பட்ட சேவைகளுக்கு கிடைக்க வேண்டியுள்ள பணத்தொகைகளாகும். அவற்றை சேகரித்துக் கொள்வதற்கு ஒரு வருட காலம் அல்லது அதற்கு குறைவாக செலவாகும் என உத்தேசிக்கப்படுமிடத்து (பொதுவான வியாபார செயற்பாட்டு நடவடிக்கைகளின் வட்டத்திற்குள் அதற்கு மேலான காலம் செலவாகும் எனின்) அவை நடைமுறைச் சொத்துக்களாக

வகைப்படுத்தப்படும். அவ்வாறல்லாத போது அவை நடைமுறைச் சொத்துக்களின் கீழ் வகையீடு செய்யப்படும்.

2.4.7 இருப்புகள்

பயன்படுத்தாத மற்றும் பழுதுபார்க்க முடியுமான வகைகளுக்கு ஏற்பாடுகள் செய்த பின்னர் பொருள் பட்டியல் செலவில் ஆகக் குறைந்த விலைக்கு மற்றும் தேறிய கண்டபலன் பெறுமதிக்கு கணக்கிடப்படும். தேறிய கண்டபலன் பெறுமதி என்பது சாதாரண வியாபார காலப்பிரிவுக்குள் பொருட்கள் பட்டியலை விற்பனை செய்ய முடியுமான விலை என்பதோடு நட்ட இருப்புக்கள் மற்றும் பழுதுபார்ப்பு இருப்புக்கள், இருப்புக்கள் அட்டவணையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

2.4.8 காசும் காசுக்கு சமமானவைகளும்

கையிருப்பு மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றின் பணிகளுக்காக பணப் பெறுமதியை அறிந்துகொள்வதற்கு இலகுவாக மாற்றீடு செய்ய முடியுமான குறுகியகால உயர் திரவத்தன்மையுள்ள முதலீடுகள் கையிருப்பு தொகை மற்றும் பணம் சார்ந்தவைகள் என வரைவிலக்கணம் செய்யப்படும். பணமும் மற்றும் பணத்திற்கு சமமானவைகள் என்பது கையிருப்புத் தொகை மற்றும் வங்கி மேலதிகப் பற்று தவிர்ந்த ஏனைய குறுகிய கால கடன் பெறுகைகள் மற்றும் குறுகிய கால முதலீடுகள் என்பன உள்ளடங்கும்.

2.4.9 காசுப் பாய்ச்சல் கூற்று

காசுப் பாய்ச்சல் கூற்று, இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இலக்கம் எல்.கே.ஏ.எஸ். LKAS 07 (காசுப் பாய்ச்சல் கூற்று) ஏற்ப மறைமுகமான பயன்பாட்டின் ஊடாக தயாரிக்கப்பட்டுள்ளது.

2.4.10 ஊழியர் நலன்கள்

(அ) குறிப்பிட்ட நலத்திட்டம் - ஓய்வூதிய பணிக்கொடை

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டத்தின் கீழ் ஓய்வூதிய நலன்களுக்கான முறிகளுக்காக 2020 ஆம் ஆண்டின் காலப் பகுதிக்குள் 123 ஊழியர்களை உள்ளடக்கிய குறிப்பிட்ட நலத்திட்டமாகும். இந்த திட்டத்தின் தேவைப்பாடுகளை நிறைவு செய்யும் பொருட்டு ஆரம்ப வருடத்திலிருந்து முழுமையான ஒவ்வொரு வருடத்திற்கும் சகல ஊழியர்களினதும் நிதி ஆண்டின் இறுதி மாதத்தின் அரைச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்ட பெறுமதிக்கு சமமான தொகை ஐந்தொகையில் ஒதுக்கீடொன்றாக முன்கொண்டு செல்லப்படுகிறது. வருட ஆரம்பத்திலிருந்து முன்கொண்டு வந்த

ஒதுக்கீடுகளில் ஏற்படும் வித்தியாசத்தின் குறைபாடு தொடர்பாக வருமானக் கூற்றில் நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) குறிப்பிட்ட பங்களிப்புத் திட்டம் - ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றுக்கு உரிமைப் பெறுகின்றனர். ஊழியர்களின் நிகர சம்பளத்தின் அடிப்படையில் 12% உம் சபையினால் 3% ம் என்ற அடிப்படையில் முறையாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றுக்கு பங்களிப்புச் செய்யப்படும்.

2.4.11 கடன் பெற்றுக்கொள்ளல்

கடன் பெறுகைகள் அடிப்படையாக அடையாளம் காணப்படுவது மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் செலவினம் அற்ற பொதுவான மதிப்பின் பிரகாரமாகும். எதிர் வரும் காலத்தில் விளைவுப் பயன் வட்டி முறையைப் பயன்படுத்தி தவணை முறைக் கடன் கரைப்பு செலவு அடிப்படையில் கடன்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. கிடைக்கப்பெற்ற தொகை கொடுக்கல் வாங்கல்களின் செலவினம் தவிர்ந்த மற்றும் விடுவித்துக்கொள்ளும் மதிப்புக்கு இடையில் காணப்படும் (தேறிய கொடுக்கல்வாங்கல் செலவு) ஏதேனும் வித்தியாசம் இருப்பின் அதனை கடன் பெறுகை காலத்திற்குள் வருமான கூற்றில் காட்டப்படும்.

2.4.12 பொறுப்புக்கள் மற்றும் ஒதுக்கீடுகள்

கடந்தகால நிகழ்வுகளின் பெறுபேறாக சட்டரீதியான / சம்பிரதாயபூர்வ முறியொன்று நடப்பு வருடத்தில் இருக்கும் போது பொறுப்புக்கள் மற்றும் ஒதக்கீடுகள் என்பன நிதிக்கூற்றுகளில் இனங்காணப்படும். அவ்வாறான முறிகளை தீர்ப்பதன் மூலம் பொருளாதார நலன்களை உள்ளடக்கிய வளங்கள் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கடன் தருனர் ஒருவரினால் வேண்டுகோள் விடுக்கப்படும் போது அல்லது நிதிக் கூற்றுகள் தினத்திலிருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்த வேண்டிய முறிகள் என்பன நிதிக்கூற்றில் நடைமுறை பொறுப்புக்களாக குறிப்பிடப்படும். நிதிக்கூற்றுகள் தினத்திலிருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்தவேண்டிய பொறுப்புக்கள் நிதி நிலைமை தொடர்பான விபரமான கூற்றில் நடைமுறையல்லாத பொறுப்பாக கணிக்கப்படும்.

(அ) **வியாபார மற்றும் வேறு செலுத்த வேண்டியவைகள்**

வர்த்தக செலுத்த வேண்டியவைகளாக சாதாரண வியாபார காலத்திற்குள் வழங்குநர்களுக்கு பொருட்களுக்கு அல்லது அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சேவை ஒன்றுக்கு செலுத்துவதற்குள்ள பொறுப்புக்களின் பெறுமதியாகும். அவை செலுத்தப்பட வேண்டிய காலம் ஒரு வருடம் அல்லது அதற்கு குறைவாக செலவாகும் என உத்தேசிக்கப்படுமிடத்து (பொதுவான வியாபார செயற்பாட்டு நடவடிக்கைகளின் போது பொதுவான தொழில்பாட்டு சுற்றுக்குள்) அவ்வாறு செலுத்தப்பட வேண்டிய கணக்குகள் நடைமுறை பொறுப்புக்களாக வகைப்படுத்தப்படும். அவ்வாறல்லாத போது அவை நடைமுறை சொத்துக்களின் கீழ் வகையீடு செய்யப்படும்.

அனுப்பப்படும் இருப்புக்கள் உள்ளிட்ட அனைத்து கொள்வனவுகளுக்கும் பொருட்கள் கிடைக்கப்பெறுவதை பதியும் போது கணக்கேடுகளில் பொறுப்புக்களை அறிக்கையிடும் கொள்கை லக்சல நிறுவனத்தினால் பின்பற்றப்பட்டுள்ளது.

2.4.13 **வருமான வரி**

தற்போதுள்ள வருமான வரி அறவிடுவது கணக்கிடப்படுவது கம்பனியினால் வரி வருமானத்தை செயற்படுத்தி உருவாக்கும் போது கம்பனியின் நிதி நிலமை பற்றிய கூற்றின் திகதிக்கு நாட்டில் அமுலிலுள்ள அல்லது போதியளவு விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைவாகும். பயன்படுத்தப்படும் வரிக் கட்டளைகளின் பொருள்கோடல்களுக்கு உட்பட்ட நிலமைகளுக்கு ஏற்புடையதாக வரி அறிக்கைகள் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் முகாமைத்துவத்தினால் தவணை அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுவதோடு, வரி அதிகாரபீடங்களுக்கு செலுத்தவேண்டுமென உத்தேசிக்கப்படும் பணத் தொகையின் அடிப்படையில் ஒதக்கீடுகளும் மேற்கொள்ளப்படும்.

பொருட்கள் விற்பனை

பொருட்கள் விற்பனையின் மூலம் கிடைக்கும் வருமானம், பெறப்பட்ட மற்றும் பெறவேண்டிய தேறிய இலாபம், விற்பனை கழிவுகள் மற்றும் கொள்ளளவுகளின் சாதாரண பெறுமதிக்கு அளவிடப்படும். விசேட ஆபத்துக்கள் மற்றும் உரிமை நலன்கள் கொள்வனவு செய்பவருக்கு பொறுப்பளிக்கப்பட்டிருக்கும் போது, அறவிடுவதற்கு முடியுமாக உள்ள போது சார்புச் செலவு

2.4.14 செலவுகளை இனம்காணல்

நிதிக் கூற்றுக்களில் செலவினங்கள் இனம்காணப்படுவது செய்யப்பட்ட செலவினம் மற்றும் குறிப்பிட்ட வருமான விடயங்களுக்கு இடையிலுள்ள உழைப்புக்கள் ஆகியவற்றுக்கு இடையிலுள்ள நேரடி தொடர்பின் அடிப்படையிலாகும். வினைத்திறனுடனான வியாபாரத்தைப் பேணிவருவம் போதும் சொத்துக்கள் ஆலைகள் மற்றும் பொறிகளை பராமரிக்கின்ற போதும் ஏற்படும் அனைத்து செலவினங்களும் வருமானக் கூற்றில் அறவீடுகளாக காட்டப்பட்டுள்ளது.

வருமானக் கூற்றை சமர்ப்பிக்கும் செயற்பாட்டுக்காக கம்பனியின் மற்றும் குழுமத்தின் செயலாற்றுகைக்கு உரிய அடிப்படைகள் அதன் மூலம் நியாயமாக எடுத்துக்காட்டப்படும் என்ற அடிப்படையில் ''செலவினத்தின் செயற்படுத்தல்'' முறை பின்பற்றப்பட்டுள்ளது.

(அ) மீண்டுவரும் செலவுகள்

வருமான கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள படி சபையினால் உழைக்கப்படும் இலாபம் யாதெனில், சகல அறிந்த பொறுப்புக்களுக்காக மற்றும் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் முறையே தேய்வுக்கான ஒதுக்கீடுகளை வழங்கிய பின்னர் மீதமாகும் தொகையாகும்.

(ஆ) மூலதனச் செலவுகள்

வியாபார நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்காகவோ அல்லது வியாபாரத்தின் உழைப்புக் கொள்ளளவை உயர்த்துவதற்கு நிரந்தரமான நிலைமையை கொண்ட சொத்துக்களை விரிவுபடுத்துவதற்கோ அல்லது விருத்தி செய்வதற்காகவோ செலவிடப்பட்ட செலவுகள் மூலதனச் செலவுகளாக கொள்ளப்பட்டுள்ளன.

சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களை அகற்றும் போது கிடைக்கும் வருமானங்கள் எனும் அடிப்படையில் இலாபம் அல்லது நட்டம் என்ற ரீதியில் வருமான கூற்றினுள் கணக்கிடப்பட்டுள்ளது.

2.4.15 கடன் பெறுகை செலவுகள்

கடன் பெறுகைச் செலவுகள் அவை செலவிடப்படும் வருடத்தில் ஒரு செலவாக கணக்கிடப்படும்.

2.4.16 முறிகள் மற்றும் நிச்சயமற்ற சந்தர்ப்பங்கள்

சபையின் கட்டுப்பாட்டுக்கு வெளியே நடைபெறும் கடந்தகால

நிகழ்வொன்று காரணமாக எழக்கூடிய நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள் நிகழுதல் அல்லது நிகழாதிருத்தல் காரணமாக மாத்திரம் உறுதிப்படுத்தப்படும் மறைமுக சொத்துக்கள் மற்றும் முறிகள் நிச்சயமற்ற சந்தர்ப்பங்கள் ஆகின்றன.

2.4.17 ஐந்தொகை தினத்திற்குப் பின்னர் நிகழ்ந்தவை

ஐந்தொகை தினத்திற்குப் பின்னர் நிகழும் சகல குறிப்பிடத்தக்க சம்பவங்களும் ஏற்புடைய சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தப்பட்டு செம்மையாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கருதப்படுகின்றது.

இலங்கை கைப்பணிகள் சபை
நிதிக் கூற்றுகள்

3. வருமானம்	2020	2019
	ரூபா	ரூபா
காட்சிகூடங்களின் விற்பனை		
தும்முல்லை	79,691,725	265,742,091
நூதனச்சாலை	19,175,538	76,213,119
காலி	19,452,867	60,187,419
பேராதனை	16,075,609	54,632,521
கட்டுநாயக்கா	11,240,568	33,397,236
கோட்டை	10,143,012	28,098,047
வெலிபென்ன 1	11,152,021	32,087,176
பத்தரமுல்லை	5,698,666	18,543,344
கண்டி	8,247,892	15,160,845
கட்டுபெத்த	5,017,082	15,415,364
பின்னவல	4,178,202	10,473,120
நுவரெலியா	1,818,842	3,341,825
மொத்த காட்சிகூடங்களின் விற்பனை	191,892,024	613,292,107
நேரடி/வாடிக்கையாளர் விருப்பம் படி கட்டளைகள்	2,847,980	9,066,676
	194,740,004	**622,358,783**
நாட்டைக் கட்டியெழுப்புவம் வரி (NBT)	-	(5,062,438)
	194,740,004	**617,296,345**

4. ஏனைய வருமானம்	2020	2019
	ரூபா	ரூபா
வாடகை வருமானம்	5,883,099	10,727,613
சேமிப்புக் கணக்கின் வட்டி	81,044	78,627
அந்நியச் செலாவணி இலாபம்	854,669	-
	6,818,812	**10,806,240**

5. நிருவாக செலவினம்	குறிப்புகள்	2020	2019
		ரூபா	ரூபா
சம்பளம் மற்றும் படிகள்		69,534,613	78,609,104
ஊக்குவிப்பு படி		-	8,171,280
ஊ.ந.பொ.நி. முற்றும் ஊ.சே.நிதியம். (E.P.F. & E.T.F.)		9,886,048	10,277,712
பணிக்கொடை		7,129,839	7,278,099
போக்குவரத்து படி		4,965,599	13,501,559
பணிப்பாளர்களின் கட்டணங்கள் மற்றும் சபை கூட்டங்களுக்கான செலவினம்		548,939	1,301,166
கணக்காய்வு கட்டணங்கள்/தொழில்சார் கட்டணங்கள்		1,410,000	1,567,992
சட்டக் கட்டணங்கள்		135,800	891,040
பாதுகாப்பு கட்டணங்கள்		11,184,146	15,356,646
வாடகை மற்றும் வரிபணம்		16,467,874	36,212,970
மின்சாரம்		10,687,551	19,536,248
தேய்மானம்		26,414,467	25,928,260
துப்பரவேற்பாட்டு சேவைகள்		4,927,744	7,978,668
ஏனைய பதவியணி செலவினம் *	5.1	3,810,173	19,424,090
ஏனைய தொழில்பாட்டு செலவினம் *	5.2	21,518,789	46,541,184
		188,621,582	**292,576,018**

உப குறிப்புகள்

5.1

ஏனைய பதவியணி செலவினத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. *	2020	2019
	ரூபா	ரூபா
மேலதிகம்	-	7,958,682
போனஸ்	-	1,741,500
ஊழியர் நலனோம்பல்	2,582,908	5,601,924
பணப் பாதுகாப்பு வட்டி	212,241	213,769
பதவியணி பயிற்சி	29,000	279,589
மருத்துவ செலவினம்	986,024	1,162,752
VRS	-	2,465,874
	3,810,173	**19,424,090**

இலங்கை கைப்பணிகள் சபை

நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

உப குறிப்பு	**2020**	**2019**
5.2	**ரூபா**	**ரூபா**
ஏனைய தொழில்பாட்டு செலவினத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது. *		
ஆலோசனை கட்டணங்கள்	-	76,500
வியாபார அறிவிப்புகள்	324,924	1,089,270
அச்சீடு மற்றும் எழுதுகருவி	1,146,501	2,614,117
பத்திரிக்கை மற்றும் வார சஞ்சிகைகள்	7,590	63,090
அஞ்சல் கட்டணங்கள் / தொலைபேசி/டெலெக்ஸ்	11,029,945	11,913,311
எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய்	595,729	1,439,559
இருப்புகளின் ஒப்பாய்வு	210,356	377,900
வியாபார அனுமதிப்ப பத்திர கட்டணங்கள்	252,720	252,720
கணினி செலவினம்	170,005	245,919
காப்புறுதி	278,607	2,384,270
நீர் கட்டணம்	368,221	475,049
பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு கட்டிடம்	1,322,226	8,627,199
பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு - இயந்திர உபகரணங்கள்	1,272,935	1,545,930
வாகனங்களை வாடகைக்கு வழங்கும் கட்டணங்கள்	3,025,968	10,930,281
அளிப்புகள் மற்றும் கட்டிடங்களின் கடன்தீர்ப்பு தேறிய -வேறுபாடு	260,365	-
சலுகை கட்டணங்கள்	1,197,707	4,500,416
திறப்பு விழா செலவினம்	49,734	-
முத்திரை கட்டணங்கள்	5,256	5,653
	21,518,789	**46,541,184**

இலங்கை கைப்பணிகள் சபை

நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

6. விநியோகச் செலவினம்	**குறிப்புகள்**	**2020**	**2019**
		ரூபா	**ரூபா**
ஆலோசனை கொமிஸ்		12,089,387	35,276,106
கிரெடிட் காட் கொமிஸ்		2,415,398	7,732,406
பொதி பொருட்கள் உள்நாட்டு		1,157,820	5,138,417
தொழில்முயற்சிகளின் மேம்பாடு		356,236	1,831,203
பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு - பொருட்களை கொள்வனவு செய்தல்		102,760	286,269
மீள செலுத்தாத கேள்வி வைப்புகள்		-	15,365
பொருட் போக்குவரத்து		79,300	133,825
பிரயாணச் செலவினம்		1,038,372	2,499,417
மதிப்பீட்டு செலவினம்		77,420	204,908
காப்புறுதி மற்றும் பொருட் போக்குவரத்து கட்டணங்கள்		161,511	652,274
விசேட கட்டளைச் செலவினம்		356,535	32,650
		17,834,739	**53,802,840**

	2020	**2019**
	ரூபா	**ரூபா**
7. நிதிசார் செலவினம்		
வங்கி கட்டணங்கள்	148,333	345,488
மேலதிக பற்று வட்டி	-	5,912
கடன் வட்டி - இலங்கை வங்கி	27,033,067	54,337,642
- பி.அ.வங்கி	9,823,585	19,899,278
	37,004,985	**74,588,320**

8. வரி

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள செலுத்தப்பட வேண்டிய பணத்தொகை கடந்த ஆண்டுகளில் சேர்ந்துள்ளவைகள் ஆவதுடன், அவை சபை எதிர்நோக்கிய நிதிக் கஷ்டங்கள காரணமாக தீர்க்கப்படவில்லை. 2019 ஆம் ஆண்டு தொடக்கம், சபை வரி சட்டங்களுக்கு ஒழுங்கமையும் பொருட்டு ஒழுங்குமுறையில் வரி செலுத்தலை ஆரம்பித்துள்ளது.

இலங்கை கைப்பணிகள் சபை
நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

09. சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் பொறித் தொகுதிகள்

	குறிப்புகள்	2020 ரூபா	2019 ரூபா
சொந்த சொத்துக்கள்	9.1	698,222,582	723,573,692
கட்டிடங்களின் அபிவிருத்தி செலவினம்	9.2	198,897,809	223,692,208
		897,120,391	**947,265,900**

9.1 சொந்த சொத்துக்கள்

	காணிகள்	கட்டிடங்கள்	பொறித் தொகுதிகள் மற்றும் இயந்திரங்கள்	தளவாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்	கணினி துணைக் கருவிகள்	கடிதங்கள்	மேற்கொள்கின்ற மூலதன வேலைகள்	மொத்தம்
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
செலவினம் அல்லது மதிப்பீடு								
2019 சனவரி 01 ஆந் திகதியில் மீதி	396,037,214	248,797,761	100,601,721	59,670,175	30,886,409	31,109,750	45,451,390	**912,554,420**
சேர்த்தல்		-	299,439	488,054	2,450,757	1,433,624	-	**4,671,874**
அகற்றல்			(104,399)					**(104,399)**
2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் மீதி	**396,037,214**	**248,797,761**	**100,796,761**	**60,158,229**	**33,337,166**	**32,543,374**	**45,451,390**	**917,121,895**
அகற்றல்								-
சேர்த்தல்	-	-	110,730	21,500	75,150	855,985	-	**1,063,365**
2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் மீதி	**396,037,214**	**248,797,761**	**100,907,491**	**60,179,729**	**33,412,316**	**33,399,359**	**45,451,390**	**918,185,260**
தேய்மானம்								
2019 சனவரி 01 ஆந் திகதியில் மீதி	-	32,640,398	53,127,011	34,478,499	29,472,703	16,761,239	-	**166,479,850**
சீராக்கல்		1,207,954						**1,207,954**
அகற்றல்			(67,859)					**(67,859)**
ஆண்டுக்கான அறவிடல்	-	6,203,277	10,066,673	5,992,428	501,649	3,164,231		**25,928,258**
2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் மீதி		40,051,629	63,125,825	40,470,927	29,974,352	19,925,470		**193,548,203**
சீராக்கல்								-
அகற்றல்								-
ஆண்டுக்கான அறவிடல்	-	6,203,277	10,089,835	6,016,898	781,157	3,323,308		**26,414,475**
2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் மீதி	**-**	**46,254,906**	**73,215,660**	**46,487,825**	**30,755,509**	**23,248,778**	**-**	**219,962,678**
முன்கொண்டு வரப்படும் பெறுமதிகள்								
2019 திசெம்பர் 31 ஆந் திகதியில்	396,037,214	208,746,132	37,670,936	19,687,302	3,362,814	12,617,904	45,451,390	723,573,692
2020 திசெம்பர் 31 ஆந் திகதியில்	**396,037,214**	**202,542,855**	**27,691,831**	**13,691,904**	**2,656,807**	**10,150,581**	**45,451,390**	**698,222,582**

9.2 கட்டிடங்களின் அபிவிருத்தி செலவினம்

	2020 LKR	2019 LKR
செலவு அல்லது அவ்வாறு கருதப்படும் செலவினம்		
சனவரி 01 ஆந் திகதியில் மீதி	386,446,053	384,452,630
மேலதிகம்	805,966	1,993,423
திசெம்பர் 31 ஆந் திகதியில் மீதி	387,252,019	386,446,053
கடன்தீர்ப்பு		
சனவரி 01 ஆந் திகதியில் மீதி	**162,753,845**	**137,413,843**
ஆண்டுக்கான அறவிடல்	25,600,365	25,340,002
திசெம்பர் 31 ஆந் திகதியில் மீதி	**188,354,210**	**162,753,845**
கொண்டு வரப்படும் பெறுமதிகள்		
சனவரி 01 ஆந் திகதியில் மீதி	223,692,208	247,038,787
மேலதிகம்	805,966	1,993,423
திசெம்பர் 31 ஆந் திகதியில் மீதி	**198,897,809**	**223,692,208**

9.2 கட்டிடம் அபிவிருத்தி செலவினம்
(தொடர்பு தொடர்புடையதாகும்.....)

கடன்தீர்ப்பு இடம்	ஆண்டு	செலவினம்	விகிதாசாரம்	2020 சனவரி 01 இல ஒட்டுமொத்த கடன் தொகை இருப்பு	2020 ஆம் ஆண்டில் கடன் தீர்ப்பு	2020 திசமெம்பர் 31 ஆந் திகதியில் திரட்டிய கடன்தீர்ப்பு மீதி	2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் கட்டிடங்கள் அபிவிருத்தி செலவில் கொண்டு வரப்பட்ட பெறுமதிகள்
ஆலோசனை கொமிஸ்	2013	172,847,765					
கிரெடிட்காட் கொமிஸ்	2014	1,881,295					
பொதியிடல் பொருட்கள் - உள்நாட்டு	2015	389,177					
மொத்தம்		**175,118,237**	5.77%	63,848,983	10,101,214	73,950,197	101,168,040
பத்தரமுல்லை	2013	117,704,905					
பத்தரமுல்லை	2014	7,119,771					
பத்தரமுல்லை	2015	9,744,207					
மொத்தம்		**134,568,883**	5.77%	47,836,285	7,762,237	55,598,522	78,970,361
பின்னவளை	2013	10,086,000	10.00%	7,060,200	1,008,600	8,068,800	2,017,200
வாகொல்லை	2014	810,487	10.00%	486,291	81,049	567,340	243,147
பேராதனை	2013	31,657,966					
பேராதனை	2014	8,968,353					
பேராதனை	2015	677,220					
மொத்தம்		**41,303,539**	10.00%	27,880,198	4,130,354	32,010,552	9,292,987
வெலிபன்னை	2013	10,269,019	10.00%	7,188,315	1,026,902	8,215,217	2,053,802
குதிரை திடல்	2013	1,113,613	10.00%	779,526	111,361	890,887	222,726
கட்டுநாயக்க	2013	1,060,000	10.00%	742,000	106,000	848,000	212,000
உனவட்டுன	2013	1,000,000	10.00%	700,000	100,000	800,000	200,000
K-Zone	2013	8,353,071	10.00%	5,847,147	835,306	6,682,453	1,670,618
துன்முல்ல		769,781	10.00%	384,898	76,977	461,875	307,906
கண்டி	2019	1,993,423		-			
		805,966					
		2,799,389	10.00%		260,366	260,366	2,539,023
மொத்தம்		**387,252,019**		**162,753,843**	**25,600,366**	**188,354,209**	**198,897,810**

10. பொருட் பதிவேடு	குறிப்புகள்	2020 ரூபா	2019 ரூபா
காட்சி கூடங்களின் வியாபாரம் முதலாவது தரத்துடன் கூடிய முடிவுப் பொருட்கள்		469,284,075	490,273,215
இரண்டாவது தரத்துடன் கூடிய முடிவுப் பொருட்கள்		148,076,152	145,301,255
மூலப் பொருட்களுடன் மேற்கொள்கின்ற வேலைகள்	**10.1**	1,849,358	1,856,110
		619,209,585	**637,430,580**

* 2019 ஆம் ஆண்டில் இரண்டாவது தரத்திலிருந்த ரூபா. 1,629,137.00 ஆன இருப்புகளின் பெறுமதி 2020 ஆம் அண்டில் உயர் தரத்திலான இருப்புகளுக்கு மாற்றப்பட்டது.

10.1 மூலப் பொருட்களுடன் மேற்கொள்கின்ற வேலைகள்

மூலப்பொருட்கள் மற்றும் நடைமுறையிலுள்ள செயற்பாடுகள் நுகர்வோரின் விருப்புக்கமைவாக தயாரிக்கப்பட்ட நேரடி கட்டளைக்காக உற்பத்தி செய்யப்பட்ட உருப்படிகளை கொண்டமைந்திருக்கும்.

11. வியாபாரம் மற்றும் ஏனைய கிடைக்கப் பெற வேண்டியவைகள்	குறிப்புகள்	2020 ரூபா	2019 ரூபா
வியாபாரம் கிடைக்கப் பெற வேண்டியவைகள்	11.1	8,851,463	15,849,569
ஏனைய கிடைக்கப் பெற வேண்டியவைகள்	11.2	14,605,047	20,086,262
வைப்புகள் மற்றும் முன்செலுத்தல்கள்	11.3	47,628,507	50,424,338
		71,085,017	86,360,169
11.1 வியாபாரம் கிடைக்கப் பெற வேண்டியவைகள்			
வியாபார கடனாளிகள்		8,765,105	13,019,327
கிடைக்கப் பெற வேண்டிய கடன் அட்டைகள்		86,358	2,830,242
		8,851,463	**15,849,569**
11.2 ஏனைய கிடைக்கப் பெற வேண்டியவைகள்			
பணியாற் தொகுதியினரின் கடன்		897,500	116,250
கிடைக்கப் பெற வேண்டிய வாடகை		4,625,800	10,921,900
கிடைக்கப் பெற வேண்டிய ESC		9,049,198	9,049,198
கிடைக்கப் பெற வேண்டிய ஏனைய		32,549	(1,086)
		14,605,047	**20,086,262**
11.3 வைப்புகள் மற்றும் முன் செலுத்தல்கள்			
பாதுகாப்பு வைப்புகள்		1,925,446	1,925,446
முன் செலுத்தல்கள்		4,174,854	5,706,303
செலுத்திய முற்பணம்		20,168,978	22,511,554
பிடித்து வைத்துக் கொள்ளப்பட்ட பணம்		12,502,564	12,502,564
மீள செலுத்தும் வைப்புகள்		9,037,344	7,881,157
விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய சம்பள முறை		-	77,993
கிடைக்கப்பெற வேண்டிய பிணை		(180,679)	(180,679)
		47,628,507	**50,424,338**

இலங்கை கைப்பணிகள் சபை
நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

	2020	2019	2018
	ரூபா	ரூபா	ரூபா
12.பணமும் பணத்திற்கு சமமானவைகளும்			
வங்கி பணம்	27,471,630	26,888,268	22,832,694
கையிருப்பு பணம்	531,276	2,041,668	1,618,606
	28,002,906	**28,929,936**	**24,451,300**
வருமான ஒதுக்கத்தின் ஏனைய கூறுகள்			
ஆரம்ப மீதி	(123,528,974)	(178,017,763)	(38,180,995)
முன்னரான ஆண்டின் திருத்தங்கள்	(1,387,226)	54,488,789	(139,836,768)
	(124,916,200)	**(123,528,974)**	**(178,017,763)**

வருவாய் ஒதுக்கத்தில் உள்ள ஏனைய கூறுகளுக்கிடயில் திரண்ட வருமான ஒதுக்கத்தின் ஊடாக மதிப்பாய்வு செய்யப்பட்டு, நிறைவேற்றிய முன்னரான காலப்பகுதிக்கு ஏற்புடையதான திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

	2020	2019	2018
	රු.	රු.	රු.
13. ஓய்வூதிய நலன் பொறுப்புகள்			
ஆரம்ப மீதி	50,896,038	44,191,479	38,062,261
ஆண்டுக்கான பணிக்கொடை ஒதுக்கீடுகள்	7,129,839	7,278,099	6,704,212
ஆண்டில் பணிக்கொடை செலுத்தல்	(1,821,898)	(573,540)	(574,994)
இறுதி மீதி	**56,203,979**	**50,896,038**	**44,191,479**

1983 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்தும் சட்டத்தின் கீழ் ஓய்வூதிய நலன்களுக்கான பொறுப்புகள் அமைப்பின் 123 ஊழியர்கள் உள்ளடங்கும் வகையிலான நலன் திட்டமாகும்.

இலங்கை கைப்பணிகள் சபை
நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

14. பிற்போடப்பட்ட வருமானம்

அளிப்புகளின் விபரங்கள்	ஆண்டு	கடன்தீர்ப்பு விகிதாசாரம்	கிடைக்கப்பெற்ற ஆரம்ப அளிப்பு	2018 திசெம்பர் 31 திகதியில் கடன் தீர்ப்பு மீதி	2019 ஆண்டில் கடன் தீர்ப்பு பெறுமதி	2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் கடன்தீர்ப்பு மேற்கொள்ளாத மீதி
பொருளாதார அபிவிருத்தி	**2012**	10%	100,000,000	20,000,000	10,000,000	**10,000,000**
வியாபார மற்றும் வர்த்தக அமைச்சு	**2013**	10%	36,000,000	10,800,000	3,600,000	**7,200,000**
வரவு செலவு ஒதுக்கீடுகள்	**2013**	10%	10,224,643	3,067,393	1,022,464	**2,044,929**
வரவு செலவு ஒதுக்கீடுகள்	**2013**	10%	42,109,637	16,843,854	4,210,964	**12,632,890**
வரவு செலவு ஒதுக்கீடுகள்	**2013**	10%	11,099,920	3,329,976	1,109,992	**2,219,984**
வரவு செலவு ஒதுக்கீடுகள்	**2013**	10%	7,828,426	2,348,530	782,843	**1,565,687**
பொருளாதார அபிவிருத்தி	**2014**	10%	35,000,000	14,000,000	3,500,000	**10,500,000**
வரவு செலவு ஒதுக்கீடுகள்	**2014**	10%	11,137,374	4,454,960	1,113,737	**3,341,223**
மொத்தம்			**253,400,000**	**74,844,713**	**25,340,000**	**49,504,713**

இலங்கை கைப்பணிகள் சபை
நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

	2020	2019
	ரூபா	ரூபா
15. நீண்ட கால கடன்		
ஆரம்ப மீதி	431,726,929	303,929,372
ஆண்டில் பெற்றுக் கொண்ட கடன்	8,323,585	273,000,000
ஆண்டில் செலுத்திய கடன்	(327,105)	(145,202,443)
ஆண்டு இறுதி	439,723,409	431,726,929
(கழித்தல்) ஆண்டில் செலுத்தப்பட வேண்டிய	(54,444,000)	(43,076,000)
நீண்டகால கடன் பிணைப்புகள்	**385,279,409**	**388,650,929**

15.1 இலங்கை வங்கி - 2018 ஆண்டு இறுதியில் கடன் மீதி ரூபா.மில்லியன் 273

2012-2018 காலப் பகுதிக்குள் ரூபா.மில்லியன் 950 ஆன கடன் தொகை கோட்டை கட்டிடத்தை ஈட்டுக்கு வைப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பெற்றுக்கொண்ட கடன் தொகையில் கண்காட்சி கூடங்களின் தரத்தினை அதிகரிப்பதற்கு கடன் செலுத்துவதற்காக லக்சல தமது வருமானத்தில் அடைவினை கைப்பற்றியது. 2013-2019 வரையிலான காலப் பகுதியில் மூலதன கடன் தொகையினை சீராக்கப்பட்டு இலங்கை வங்கியின் கடன் தொகையான ரூபா.மில்லியன் 273 வரை குறைத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

15.2 2019 நிதி ஆண்டின் முதலாவது காலாண்டின் பின்னர் பாஸ்கு ஞாயிறு தாக்குதல் காரணமாக நிறுவனம் பின்னடைவை எதிர் நோக்கியது. ஆகையால் அப்போதிருந்த நிலைமையினை சீராக்குவதற்கு நிலவிய கடன் மீள்கட்டமைக்கப்பட்டது. நீண்டகால கடன் 08 இல் குறுகிய கால சுழற்சி கடன்களின் மீதியினை இரத்துச் செய்து ரூபா. மில்லியன் 273 ஐ ஆன மீதி கடன் மூலதனம் 2019 ஆம் ஆண்டில் புதிய கடனாக வழங்கப்பட்டது.

2019 ஆண்டில் ரூபா.மில்லியன் 273 இற்காக செலுத்தப்பட வேண்டிய மீள்கட்டமைக்கப்பட்ட கடனுக்காக பின்வரும் வகையில் மூன்று கடன்கள் வழங்கப்பட்டன 1 வசதி - காலத்திற்கான கடன் ரூபா. 40,000,000/=

2 வசதி - காலத்திற்கான கடன் ரூபா. 200,000,000/=

3 வசதி - காலத்திற்கான கடன் ரூபா. 33,000,000/=

15.3 பிரதேச அபிவிருத்தி வங்கி - ரூபா மில்லியன் 200

அவசர செயற்பாட்டு தேவைகளின் பொருட்டு ரூபா.மில்லியன் 200 ஆன கடன் வசதி 2013 ஆம் ஆண்டில் களணிய பிரதேச அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது. பொது திறைசேரி வங்கி ஊடாக கடன் வசதி வழங்கப்பட்டதால் லக்சல மூலம் எந்தவொரு பிணையும் வழங்கப்படவில்லை. 2020 ஆம் ஆண்டில் C0VID - 19 காரணமாக ஏற்பட்ட நிதி நிலைமையால் லக்சலவிடம் செலுத்துவதற்கு முடியாது போன ரூபா.மில்லியன் 8.3 ஆன வட்டி மூலதனமயப்படுத்தப்பட்டது.

இலங்கை கைப்பணிகள் சபை
நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

	2020	2019
	ரூபா	ரூபா
16. வியாபார மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டியவைகள்		
வியாபாரம் - செலுத்தப்பட வேண்டிய	334,334,840	338,046,682
ஏனைய செலுத்தப்பட வேண்டிய	112,410,635	104,787,627
திரண்டு நின்ற செலவினம்	75,811,084	54,162,087
	522,556,559	**496,996,396**
17. குறுகியகால கடன்		
நீண்டகால கடன் பொறுப்பு - தற்கால பகுதி	54,444,000	43,076,000
குறுகிய கால கடன்	14,652,784	
	69,096,784	**43,076,000**

** கடந்த ஆண்டின் குறகிய கால கடன் எடுத்தலாக கணக்கிடப்பட்ட செலுத்தப்பட வேண்டிய வட்டி, குறகியகால கடன் அகற்றல்களிலிருந்து நீக்கப்பட்டு 2020 இல் செலுத்தப்பட வேண்டிய ஏனைய கொடுப்பனவுகளின் கீழ் கொண்டுவரப்பட்டது.

	2020	2019
	ரூபா	ரூபா
18. வங்கி மேலதிக பற்று		
வங்கி மேலதிக பற்று	**5,353,692**	**6,320,701**

ரூபா. 5,353,692.00 (2019 ரூபா.6, 320,701.00 ஆன வங்கி மேலதிக பற்று, ஆண்டு இறுதியில் பணப் பேரேட்டில் காணப்படும் மீதியாகும். நிதி ஆண்டில் இலங்கை வங்கி கடன் மீள்கட்டமைப்புடன் வங்கி மேலதிக பற்று வசதி ரூபா.மில்லியன் 15 வரை வழங்குவதற்கு அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது.

இலங்கை கைப்பணிகள் சபை
நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

19. எதிர்பாரா பொறுப்புகள் மற்றும் பிணைப்புகள்

சபைக்கெதிராக விசாரணையில் உள்ள வழக்குகள்:

நீதிமன்ற இலக்கம்	வழக்கு தொடரப்பட்ட திகதி	வழக்கு தொடரப்பட்ட தரப்பு	வழக்கின் இயல்பு	தற்கால நிலைமை
DMR/0280/13	2015-07-13	கோட்டே நகர சபை	சோலா பெணல் பொருத்துவதற்கான உடன்படிக்கை மீறுதல் தொடர்பில் கோட்டே நகர சபையால் லக்சலவிற்கு எதிராக மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ள வழக்கு.	கோட்டே நகர சபையிடம் வட்டியுடன் ரூபா. 4,020,000 ஆன தொகை செலுத்தப்பட வேண்டுமென தீர்ப்பு வழங்கப்பட்டது. எவ்வாறாயினும் லக்சல இது தொடர்பில் மேன்முறையீடு தொடரப்பட்டுள்ளதுநீதிமன்ற தீர்ப்பு வழங்கப்படடுள்ளதால் 2020 திசெ. 31 ஆந் திகதியில் செலுத்தப்பட வேண்டிய அதற்கு சமமான தொகை வழங்கப்பட்டது.
DMR/2255/16	2016-05-09	டிமோ தனியார் கம்பெனி	செலுத்தப்பட வேண்டிய மீதி செலுத்தாமை காரணமாக நிபந்தனைகள் மீறுதல் தொடர்பில் டிமோ நிறுவனம் லக்சலவிற்கு எதிராக மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு ஆகம்.	தீர்ப்பு வழங்கப்படவுள்ளதுடன், 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் வலுவிலுருக்கும் வகையில் எந்தவொரு வழக்கும் இல்லை.
138/2018/MR	2018-03-08	ஜெட் ஹோல்டிங்ஸ் (JAT Holdings) தனியார் கம்பெனி	லக்சலவால் சுற்றுலா சபையிடமிருந்து பெற்றுக்கொண்ட ஒப்பந்தமொன்று ஜெட் ஹோல்டிங்ஸ் சம்பெனியிடம் உப ஒப்பந்தமாக வழங்குதல் பொருட்டு செலுத்தப்பட வேண்டியுள்ள ரூபா. 8,184,683.49 ஆன கொடுப்பனவு தொடர்பில் கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு	லக்சல (இலங்கை கைப்பணிகள் சபை) பொருட்டு சட்டமா அதிபர் திணைக்களம் எதிர்ப்புகளை கவனத்தில் கொள்ளப்படடுள்ளது.
139/2018/MR	2018-04-10	ஜெட் ஹோல்டிங்ஸ் (JAT Holdings) தனியார் கம்பெனி	உலக வர்த்தக நிலையத்தில் 22 ஆவது மாடியில் அமைந்துள்ள நடுத்தீர்ப்பு நிலையம் புனரமைப்பதற்காக லக்சலவால் நீதிமன்ற அமைச்சுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. லக்சல இதனை உப ஒப்பந்தமாக ஜெட் ஹோல்டிங்ஸ் கம்பெனியிடம் வழங்கி அந்த பணியினை பூர்த்தி செய்துள்ளது. ஆயினும் அந்த கம்பெனியிடம் செலுத்தப்பட வேண்டிய எஞ்சிய தொகை செலுத்தப்படவில்லை. இதன் காரணமாக ரூபா. 32,256,980 ஆன தொகை செலுத்தப்படாமை தொடர்பில் ஜெட் ஹோல்டிங்ஸ் கம்பெனி லக்சலவிற்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு ஆகும்.	லக்சல (இலங்கை கைப்பணிகள் சபை) பொருட்டு சட்டமா அதிபர் திணைக்களம் எதிர்ப்புகளை கவனத்தில் கொள்ளப்படடுள்ளது.

உள்ளக உசாவுதல்கள்

இலங்கை கைப்பணிகள் சபையின் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் பணி தடை செய்யப்பட்ட சிரே‘ட அலுவலர்கள் இரண்டு பேருக்கு எதிராக உள்ளக உசாவுதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

தலைவர்,

இலங்கை கைப்பணிகள் சபை,

இலங்கை கைப்பணிகள் சபையின் 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டத்துடனான ஒழுங்குப்படுத்தல் தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 ஆவது பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

மேற்படி அறிக்கையின் வரையுள் இத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

டப்.பீ.சீ. விக்கிரமரத்ன

கணக்காய்வாளர் அதிபதி

பிரதிகள்:-

1. செயலாளர், பத்திக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடைகள் உற்பத்தி இராஜாங்க அமைச்சு

2. செயலாளர், நிதி அமைச்சு

தலைவர்,

இலங்கை கைப்பணிகள் சபை,

இலங்கை கைப்பணிகள் சபையின் 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டத்துடனான ஒழுங்குப்படுத்தல் தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 ஆவது பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1.1 **நிதிக் கூற்றுகள்**

1.1 மறுதலிப்பு அபிப்பிராயம்

இலங்கை கைப்பணிகள் சபையின் **2020** ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. அரசியலமைப்பில் 154 (6) உறுப்புரை பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை என்ற பகுதியில் கலந்துரையாடிய விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, சபையின் 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தரவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இல் 34 ஆவது பந்தி பிரகாரம்" இருப்புகள் தொடர்பில் அனைத்து சேதங்களையும் பதிவழித்தல் அல்லது நட்டங்கள் ஏற்பட்ட காலப் பகுதிக்குள் செலவினமாக அடையாளம் காணப்படுதல் வேண்டுமாயினும், சபையின்

சேதங்கள் இருப்புக் கணக்குகளில் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் ரூபா.3,011,720 ஆன இருப்புச் சேதங்களின் பெறுமதியை புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்குப் பதிலாக, சேதமடைந்த இருப்புகளாக முன்கொண்டு வரப்பட்டமையால் 2020 ஆம் ஆண்டில் இருப்புக்களின் பெறுமதி குறித்த அளவில் அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்விற்கான ஆண்டில் மொத்த சொத்துக்களிலிருந்து 9.2% ஆன ரூபா.148,076,152 இல் இரண்டாவது தரத்திலான இருப்பில், சேதங்கள் மற்றும் பழுதுபார்க்கப்பட வேண்டிய இருப்புகள் பொருட் மீளாய்வின்போது அடையாளம் காணப்பட்டிருந்த இருப்புகளின் மிகை, பற்றாக்குறை, நட்டங்கள், அழிக்கப்பட வேண்டிய பொருட்கள், காலவதியாகிய பொருட்கள் என்ற வகையில் தொங்கல் கணக்கிற்கு உள்ளடக்கப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டில டிசெம்பர் 15 ஆம் திகதி கட்டுபெத்த வளாகத்தில் களஞ்சியத்தை பௌதீக ரீதியாக பரிசோதனை செய்கையில் இந்த இருப்புகளில் சில இருப்புகள் அழிந்தும், ஏனைய இருப்புகள் அவற்றின் செலவினத்தையும் பார்க்க குறைந்த விற்பனை பெறுமதியை காண்பிக்கின்றதெனவும் வெளிப்படுத்திக் கொள்ளப்பட்டது. இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இல் 28 ஆவது பிரிவு பிரகாரம் அவற்றின் பெறுமதி நிகர தீர்க்கப்பட வேண்டிய பெறுமதிக்கு காண்பிக்கப்படாமை காரணமாக அந்த அளவில் இலாபம் மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) தற்போது பயன்பாட்டில் உள்ள ரூபா.29,112,880 ஆன மொத்தமாக தேய்மானத்திற்குள்ளாகிய இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 பிரகாரம் வருடாந்தம் மீள்கணிப்பீடு செய்து நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்படவில்லை.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 38 இல் 118 பிரிவு பிரகாரம், சபைக்குரிய புலனாகாத சொத்துக்களை புறம்பாக வெளிப்படுத்துதல் வேண்டும். ஆயினும் அவற்றின் பயனுள்ள ஆயுட்காலத்தை அடிப்படையாகக்கொண்டு கடன்தீர்ப்பு மேற்கொள்ளுதல் வேண்டுமாயினும், சபைக்குரிய ரூபா.10,193,250 ஆன (2011 தொடக்கம் 2013 வரையிலான செலவினம்) SAP மற்றும் POS கணினி மென்பொருள் புலனாகாத சொத்துக்களாக நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்படவில்லை என்பதுடன், கணினி மற்றும் வன்பொருள்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 20 இல் 17 ஆவது பிரிவு பிரகாரம், கடன்தீர்ப்பு விகிதாசாரம் சபையின் ஏனைய சொத்துக்களை தேய்மானம் செய்கின்ற விகிதாசாரம்படி மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன், 39 ஆவது பிரிவு பிரகாரம் நிதிக் கூற்றுகளில் அரச அளிப்புகளுக்காக பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கை வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமம் 1 பிரகாரம், சிறு கைத்தொழில் திணைக்களத்திற்கு உரியதாக இருந்த 1993 ஆம் ஆண்டில் அமைச்சுக்களின் அனுமதியின்றி சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த 1997 ஆம் ஆண்டின் ரூபா.103,030,000 இற்கு மதிப்பிடப்பட்டுள்ள 09 காணித் துண்டுகளின் பெறுமதி நிதிக் கூற்றுகளில் குறிப்புகளின் கீழ் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(எ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இல் 32 பிரகாரம் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் முன்கொண்டு வரப்பட்டுள்ள சந்தேகத்திற்கிடமான கடன் ஒதுக்கீடுதல் தொடர்பில் மீளாய்விற்கான ஆண்டின் நிதிக் கூற்றுகளில் போதியளவிலான வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்படவில்லை.

(ஏ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இல் 32 பிரகாரம் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் முன்கொண்டு வரப்பட்டுள்ள சந்தேகத்திற்கிடமான கடன் ஒதுக்கீடுதல் தொடர்பில் மீளாய்விற்கான ஆண்டின் நிதிக் கூற்றுகளில் போதியளவிலான வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்படவில்லை.

(ஐ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 20 இல் 26 பந்தி பிரகாரம் மூலதன அளிப்புகளை கணக்கு வைக்கும்போது, அதனை பிற்போடப்பட்ட வருமானமாக அடையாளம் காணப்படுதல் வேண்டுமென்பதுடன், உரிய சொத்துக்களின் ஆயட் காலம் முழுவதும் அந்தப் பெறுமதியை கடன்தீர்ப்பு செய்து வருமானக் கூற்றுகளில் வருமானங்களின் கீழ் அடையாளம் காணப்படுதல் வேண்டும். ஆயினும் சபையால் கடன்தீர்ப்பு ரூபா.25,340,000 ம் வருமானமாககணக்கு வைக்கப்படாமை காரணமாக வருமானத்தை அந்த அளவில் குறைத்தக் காண்பிக்கப்பட்டுள்ளது. அதற்கான கடன்தீர்ப்பு பெறுமதியும் செலவினமாக கணக்கு வைக்கப்படாது வேறுபாட்டு தொகையான ரூபா.260,365 ஆன தொகை மட்டும் ஏனைய தொழில்பாட்டு செலவினங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) சபையின் நிகழ்நிலை இருப்புக் கணக்கில் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் 2014 ஆம் அண்டு தொடக்கம் முன்கொண்டு வரப்படும் ரூபா.12,142,584 ஆன மீதி காணப்பட்டது. நிகழ்நிலை இருப்பு மீதி காலோசிதமாக தீர்க்கப்படாமையால் உண்மையாக காணப்படாத தவறான இருப்புகளின் பெறுமதி கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

ஓ மீளாய்விற்கான ஆண்டில் எழுதுகருவி பொருட்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் என்பவற்றின் கீழ் கணக்கு வைக்கப்பட வேண்டிய ரூபா.805, 966 ஆன செலவினம் கட்டிடங்களின் அபிவிருத்தியாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

ஔ லக்சல சளுசல நிறுவனத்திற்கான சொத்துக்கள் லக்சல நிறுவனத்திடம் கையகப்படுத்திக் கொள்வதற்காக ரூபா.15,248,576 ஆன தொகை 2012 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டு சனவரி வரை இந்தக் காணியின் உரித்தை கையகப்படுத்தாமை காரணமாக முற்பணமாக கணக்கு வைக்கப்படுதல் வேண்டுமாயினும், 2012 ஆம் ஆண்டு தொடக்கம் நிலையான சொத்துக்களாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

க 2021 ஆம் அண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் கடனாளிகளின் கணக்கில் தீர்க்கப்படாத ரூபா.4,004,034 ஆன பற்று மீதி தொகை நிலவியதன் காணரமாக அந்த அளவில்மொத்த கடன்கொடுநர்களின் மீதி குறைவாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

ங 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை ரூபா.1,566,469 அன அலுவலக உபகரணங்கள் மற்றும் சேவைக் கட்டணங்களாக மேற்கொண்ட செலவினம் கணனி மற்றும் வன்பொருட்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிரந்தது.

ச 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை ரூபா.1,566,469 அன அலுவலக உபகரணங்கள் மற்றும் சேவைக் கட்டணங்களாக மேற்கொண்ட செலவினம் கணனி மற்றும் வன்பொருட்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிரந்தது.

ஞ நிதிக் கூற்றுகளில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா.43,987,327 ஆன ஏனைய செலுத்தப்பட வேண்டிய செலவினங்களின் மொத்த பெறுமதிகளின் அவதானிப்புகள் பொருட்டு அட்டவணைகள், காலப் பகுப்பாய்வு மற்றும் மீதி உறுதிப்படுத்தியிருக்கவில்லை.

ட 2012 ஆம் அண்டில் ஆரமப் மீதியாக சீராக்கப்படாது மன்கொண்டு வரப்படும் அடையளாம் காணப்படாத ரூபா.12,002,564 ஆன பிடிபணத்தின் மீதி உறுதிப்படுத்திக்கொள்வதற்காக எழுத்திலான சாட்சிகள் கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படவில்லை.

ண மீளாய்விற்கான ஆண்டில் நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா.81,078,806 ஆன நிலையான சொத்துக்களை மீளாய்வு அறிக்கைகளில் உறுதிப்படுத்தப்படவில்லை.

த மீளாய்விற்கான ஆண்டில் நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கியிருந்த ரூபா.6,546,541 ஆன செலவினங்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படவில்லை.

ந ரூபா. 107,951,172 ஆன மூலதன அளிப்பு மீதி பல ஆண்டுகள் தொடக்கம் உரித்துகளின் கீழ் முன்கொண்டு வரப்படுவதுடன், குறித்த மீதியை பதிவழித்தல் தொடர்பாக கொள்கை முறையிலான தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் குறித்த மீதியை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு எந்தவொரு வகையிலுமான சாட்சியும் கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படவில்லை. இந்த மீதி ஏற்படுவதற்கான காரணங்களை பரிசோதனை செய்து சீராக்குவதற்கு இதுவரை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

ப SAP முறைமை மூலம் நிதிக் கூற்றுகளை தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்ட 2011 ஆம் ஆண்டில் 04 கணக்குகளுக்கு ஏற்புடையதாக ரூபா.25,540,390 ஆன பற்று மீதியும் ரூபா.30,805,565 ஆன வரவு மீதிகள் 6 உம் ஆரம்ப மீதிகளாக கணக்கு வைக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டு தொடக்கம் முன்கொண்டு வரப்பட்டிருந்தது. இந்த மீதிகளின் செவ்வைத்தன்மை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக எந்தவொரு சான்றும் கணக்காய்விடம் சமரப்பிக்கப்படவில்லை. இந்த மீதிகள் ஏற்படுவதற்கான காரணங்களை பரிசோதனை செய்து தீர்ப்பதற்கு இதுவரை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

ம 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதிக் கூற்றுகள் பிரகாரம் மொத்த இருப்புகளின் பெறுமதி ரூபா.619,209,585 ஆயினும், பௌதீக இருப்புகளின் ஆய்வு அறிக்கை பிரகாரம் இருப்புகளின் மொத்த பெறுமதி ரூபா.481,768,792 ஆகியதால், ரூபா.137,440,793 ஆன வேறுபாடு காணப்பட்டது.

ய சபையின் இருப்புகளின் கட்டுப்பாட்டு பிரிவின் அறிக்கைகள் பிரகாரமும் பேரேடின் பிரகாரமும் விசேட கட்டளை (Special Order) இருப்புக் கணக்கின் மீதி ரூபா.802,034 ஆன எதிர்மறையான மீதி குறிப்பிடப்படினும், இறுதி இருப்புகளின் சாராம்ச அறிக்கை பிரகாரம், பௌதீக இருப்புகளின் பெறுமதி ரூபா. 1,090,325 ஆன நேர்மறையான மீதியாக காண்பிக்கப்பட்டிருந்தது. ஆயினும் SAP கணினி முறைமை படி எந்தவொரு மீதியும் காண்பிக்கப்படாமை காரணமாக பௌதீக இருப்புகளின் மீதியும் கணக்கு முறைமைகளின் மீதிக்கும் இடையில் ரூபா.1,090,352 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இதன்படி நிறுவனத்தினுள் பௌதீக சொத்துக்களின் மீதி மற்றும் கணினி முறைமைகளின் மீதிகளில் முரண்பாடுகளை அடையாளம் காணப்பட்டு ஒப்பிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

ர மீளாய்விற்கான ஆண்டின் நிதிக் கூற்றுகள் பிரகாரம் சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் மீதியில் 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதியில் மீதி மற்றும் அன்றைய திகதியின் மீளாய்வு அறிக்கை பிரகாரம் மீதியில் ரூபா. 132,842,084 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

ல நிதிக் கூற்றுகளின்படி சபையால் செலுத்தப்பட வேண்டிய மொத்த நிலுவை வரி பெறுமதி ரூபா. 54,827,612 ஆயினும், உள்நாட:ட இறைவரித் திணைக்களத்தின் மீதியை உறுதிப்படுத்தும் கடிதம் பிராகரம் செலுத்தப்பட வேண்டிய நிலுவை மொத்த வரி தொகை ரூபா.56,370,397 ஆக காணப்பட்டது. இந்த மீதியில் ரூபா.16,709,488 ஆன மேலதிக அபராத தொகையும் ரூபா.590,760 ஆன மிகை கட்டணமும் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதன்படி செலுத்தப்பட வேண்டிய வரி தொகை ரூபா.1,542,785 ஐ குறைவாக நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

1.3. சபையின் 2020 ஆம் ஆண்டின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு பின்னர் என்னிடம் வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றவைகளை சபையின் 2020 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட போதும், நிதிக் கூற்றுகள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் என்று பொருட்படும். இந்த ஏனைய தகவல்களின் பொருட்டு முகாமைத்துவம் பொறுப்பு கூறல் வேண்டும்.

நிதிக் கூற்றுகள் தொடர்பான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் வெளிப்படுத்தப்படுவதில்லை என்பதுடன், நான் அது தொடர்பாக எந்தவொரு வகையிலுமான சான்றுப்படுத்தலையோ அபிப்பிராயத்தையோ தெரிவிக்கமாட்டேன்.

நிதிக் கூற்றுகள் தொடர்பான எனது கணக்காய்வின் பொறுப்பு யாதெனில், மேற்படி அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக்கொள்ள முடியுமானவிடத்து, வாசித்தல் மற்றும் அவ்வாறு மேற்கொள்கையில் ஏனைய தகவல்களை நிதிக் கூற்றுகளுடனோ அல்லது கணக்காய்விலோ வேறு வகையில் பெற்றுக்கொண்ட எனது அறிவுக்கமைவாக போருண்மையாக பொருந்தவில்லையா என்பதை கவனத்தில் கொள்ளுதலாகும்.

சபையின் 2020 ஆம் ஆண்டு அறிக்கை வாசிக்கும்போது, பொருண்மயாக தவறாக காண்பிக்கப்பட்டுள்ளதாக நான் தீர்மானித்தால், செவ்வைப்படுத்துவதற்காக நிருவகிக்கும் தரப்புகளிடம் அவ்விடயங்களை அறிவிக்கப்படுதல் வேண்டும். மேலும் செவ்வைப்படுத்தாத தவறுதலான காண்பிக்கப்படுதல் இருப்பின், அவற்றை அரசியலமைப்பின் 154(6) உறுப்புரை பிரகாரம் என்னால் காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கின்ற அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு-வொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.5. நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப்

பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து

செயற்படுவதற்கு நிறுவனத்திற்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கும் தரப்புகளை தொடர்பு கொள்கின்றேன்.

2. ஏனைய சட்டத்துடனான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பான அறிக்கை

2.1 **2018** ஆம் ஆண்டு **19** ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஒதுக்கீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 **2018** ஆம் ஆண்டு **19** ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் **12 (அ)** பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைவாக, எனது அறிக்கையில் மறுதலிப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்கள் காரணமாக, உரிய நிதி அறிக்கைகளை சபை பேணப்படவில்லை.

2.1.2. **2018** ஆம் ஆண்டு **19** ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில **6 (1) (ஈ) (III)** பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி சபையின் நிதிக் கூற்றுகள் கடந்த ஆண்டுடன் ஒத்துள்ளது.

2.1.3. **2018** ஆம் ஆண்டு **19** ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் **6 (1) (ஈ) (iv)** பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி இவ்வறிக்கையில் 1.2 (ஏ) (ட) (ண) (ம) (ல), 2.2.2

(அ) மற்றும் 3(ஆ) அவதானிப்புகள் தவிர்ந்து கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள், சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.4 கடைபிடிக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சிகள் மீதும் அளவு ரீதியிலான விடயங்களுக்கு வரையறைக்குட்படுத்தியதால், பின்வரும் வெளிப்படுதல்களை மேற்கொள்வதற்கான எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரவில்லை.

2.2.1 **2018** ஆம் ஆண்டு **19** ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் **12 (ஈ)** பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி தேசிய சபை கட்டுப்பாட்டுச் சபையின் உள்ள எவரேனுமொரு உறுப்பினர் சபையுடன் தொடர்புகொண்டு ஏதேனும் உடன்படிக்கை தொடர்பில் நேரடியாகவோ மறைமுகமாகவோ பொதுவான வணிகப் போக்கிற்கு அப்பாற்பட்டுள்ளது என்பதையும்,

2.2.2 **2018** ஆம் ஆண்டு **19** ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் **12 (ஈ)** பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்படவில்லை என்பது தொடர்பாக

(அ)	**2003.06.02** ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை-யின் 9.3.1 (vi) மற்றும் (vii) பிரிவுகள்	வெற்றிடமாகும் பதவிகளின் பொருட்டு நிச்சயமற்ற காலப்பகுதிக்கு பதில் கடமையாற்றும் நியமனம் வழங்காதிருத்தல் வேண்டுமென்பதுடன், மூன்று மாதங்களிலான ஆகக்கூடிய காலப் பகுதிக்கு மட்டுப்படுத்தல் வேண்டுமாயினும், அதற்கு ஏற்புடையதாகாத வகையில் நீண்ட காலப்பகுதி பொருட்டு 11 உத்தியோகத்தர்களுக்கு பதில் கடமையாற்றும் நியமனம் வழங்கப்பட்டிரந்தது.
(ஆ)	தாபன விதிக் கோவையின் vii அத்தியாயத்தில் 12.2 பிரிவு	சபையின் நிரந்தர பதவிகளை வகிக்காத ஒப்பந்த அடிப்படையின் மீது ஆட்சேர்ப்புச் செய்த மூன்று அலுவலர்களுக்கு பதில் கடமையாற்றும் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தது.
(இ)	2018 செப்தெம்பர் 27 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர்	பதவியணி பதவிகள் 191 இற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பினும், நிரந்தர பதவியணியில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் உள்ளீர்ப்புச்

	நாயகத்தின் DMS/1702/VO – 1 ii கடிதம்	செய்வதற்கு இவ்வறிக்கை திகதியிலும் சபைக்கு முடியவில்லை.

2.2.3 **2018** ஆம் ஆண்டு **19** ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் **12** (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்படவில்லை என்பது தொடர்பாக,

2.2.4 **2018** ஆம் ஆண்டு **19** ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் **12** (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, தேசிய சபையின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும், ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்படவில்லை என்பது தொடர்பாக

3. ஏனைய விடயங்கள்

(அ) வழங்குநர்களின் செயற்பாட்டு மூலதன தேவைகளை பூர்த்தி செய்வதற்காக பிரதேச அபிவிருத்தி வங்கியால் இலங்கை கைப்பணி சபையிடம் 2013 ஆம் ஆண்டில் 200 மில்லியன் தொகை கடன் அளிக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கை பிரகாரம், ஓராண்டுக்குள் மாதாந்த தவணையாக செலுத்துவதற்கும், கடன்தொகை மீது 9% ஆன வட்டி வீதமும் செலுத்தப்பட வேண்டி இருந்தது. உரிய வகையில் தவணை தொகை மற்றும் வட்டி செலுத்தாமை காரணமாக 2020 ஆம் ஆண்டு இறுதியில் செலுத்தப்பட வேண்டிய கடன் தொகை ரூபா.158,399,824 ம் என்ற வகையில் காணப்பட்டது. செலுத்தப்பட வேண்டிய வட்டி தொகை ரூபா.12,492,119 ம் ஆக காணப்பட்டது. வட்டி தொகையில் ரூபா.8,323,585 ஆன பெறுமதிக்கு 2020 ஆம் ஆண்டு செப்தெம்பர் 24 ஆம் திகதி வங்கியால் கடன் தவணையுரிமை (Moratorium Loan) அளிக்கப்பட்டிருந்தது. அதன்படி பிரதேச அபிவிருத்தி வங்கியிடம் 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் செலுத்தப்பட வேண்டிய வட்டி ரூபா.4,168,534 ம் கடன் தொகை ரூபா.166,723,409 காணப்படுவதுடன், கடன் வட்டி செலுத்தாமை காரணமாக மூலதனமயப்படுத்திய ரூபா.8,323,585 ஆன வட்டியும், வட்டி கணக்கிடுகையால், சபை மேலதிக செலவினமாக மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது.

(ஆ).சபையில் கணக்கு வைத்தல் மற்றும் இருப்புகளின் கட்டுப்பாட்டுக்காக SAP என்ற மென்பொருள் பயன்படுத்தப்படுவதுடன், நாளாந்த விற்பனைக்காக POS என்ற மென்பொருள் பயன்படுத்தப்படுகிறது. SAP என்ற மென்பொருள் மூலம் நிறுவனமொன்றின் நிதி முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் மற்றும் நுகர்வோர் முகாமைத்துவம், இருப்புகளின் கட்டுப்பாடு, கொள்வனவு முறைமை, தகவல் பகுப்பாய்வு மற்றும் அறிக்கையிடல், மனித வளங்களின் முகாமைத்துவம் போன்ற எல்லா துறைகளுக்கும் வசதிகள் வழங்கப்படினும், சபையால் இதனை அடிப்படை கணக்கீட்டு நடவடிக்கைகளின் பொருட்டு மட்டும்

பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி ரூபா.மில்லியன் 09 இற்கு அதிகமான செலவினங்களை மேற்கொண்டு, 10 ஆண்டுகள் முழுவதும் இந்த முறைமை குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. சபையின் நிதி முறைமைக்கு சுமையான அதிக பராமரிப்பு மற்றும் இற்றைப்படுத்தல் செலவினங்களுடன் கூடிய கணினி முறைமை பயன்படுத்துவதால் 2015 ஆம் ஆண்டின் பின்னர் தற்போதும் SAP மென்பொருள் இற்றைப்படுத்தப்பட்டு பயனுள்ள வகையில் பயன்படுத்தப்படாதிருந்தது. இந்த மென்பொருள் நீண்டகாலம் தொடக்கம் பயன்பாட்டில் இருப்பினும், குறித்த மென்பொருளுக்கான மூலக் கம்பெனியுடன் சேவை உடன்படிக்கைகளை இற்றைப்படுத்தியிருக்கவில்லை. அவ்வாறு சேவை உடன்படிக்கைகளை இற்றைப்படு- த்தாமையால் இந்த மென்பொருள்களில் புதிய பதிப்புகள் (New Vwersion) மற்றும் மேம்படுத்தல்கள் கிடைக்கப் பெறவில்லை. நிறுவனத்தில் தரவுகள் Back up ஆக வைத்துக்கொண்டிருப்பினும், அவசரமான சந்தர்ப்பங்களில் குறித்த தரவு முறைமைக்கு மீளவும் உள்ளடக்குவதற்கு முடியாமை காரணமாக (Reinstallation) முறைமையில் காணப்படும் நிறுவனத்தின் தரவுகள் தொடர்பில் பாரிய அவதானம் காணப்பட்டது. POS என்ற மென்பொருளுக்காக ரூபா.1,193,250 ஐ செலவிடப்பட்டுள்ளதுடன், 2018 ஆம் ஆண்டு வரை மட்டும் இற்றைப்படுத்தப்பட்டிருந்தது. இந்த மென்பொருள்மூலம் பாகோட் அடையாளம் காணுதல், லேபல் உருவாக்குதல் போன்ற வசதிகளை பெற்றுக்கொள்ள முடியுமாயினும் இருப்புகளின் நிலைமை மற்றும் விற்பனை நடவடிக்கைகளின் பொருட்டு மட்டும் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(இ) 44,00 ம் சதுர அடியிலான நான்கு மாடி கட்டிடமான, கோட்டை லக்சல கட்டிடம் 2013 ஆம் ஆண்டில் நவீனமயப்படுத்தலுக்காக கேள்வி திட்டத்திற்குப் புறம்பாக ICTAD தகைமைகள் பெற்றிராத தனிப்பட்ட ஒப்பந்தக்காரரிடம் கையளிக்கப்பட்டு, பெறுகை ஆலோசனைகளை கவனத்தில் கொள்ளாது ரூபா.45,451,390 ஐ செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக ICTAD நிறுவனத்தால் வழங்கிய அறிக்கை படி பௌதீக வேலைகளின் பெறுமதியைக் கழிக்கப்பட்டதன் பின்னர் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ரூபா.மில்லியன் 30 ஆன தொகை சபையிடம் கிடைக்க வேண்டியிருந்தது. குறித்த நிருமாணிப்புகளை இடையில் நிறுத்தப்பட்டதன் காரணமாக மேற்படி 44,000 ம் சதுர அடியிலான நிலப் பகுதியில் 1,200 சதுர அடியிலான காட்சிக்கூடம் பராமரித்துச் செல்கின்ற நிலப் பகுதி தவிர்ந்த, ஏனைய அளவினை 08 ஆண்டுகளுக்க அண்மித்த காலப்பகுதி முழுவதும் பயன்படுத்துவதற்கு முடியாத வகையில் பயனற்று காணப்பட்டது. அதிக பொருளாதார பெறுமதியைக் கொண்டுள்ள இந்த கட்டிடம் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் காரணமாக இடைநிறுத்தியதால், கட்டிடம் சேதமடைந்து காணப்பட்டதுடன், சபையிடம் வருடாந்தம் உழைக்கப்படவிருந்த பாரிய வருமானம் கிடைக்கப் பெறவில்லை.

(ஈ) சபையால் செயற்பாட்டு மூலதன தேவைகளுக்காக இந்த லக்சல கட்டிடம் அடகு வைக்கப்பட்டு 2012-2018 காலப்பகுதியில் பெற்றுக்கொள்ளப்பட்ட 950 மில்லியன் தொகையிலான கடன் தொகைக்கு ஏற்புடையதாக ரூபா.238,783,673 ஆன தொகை வட்டியாக இலங்கை வங்கியிடம் செலுத்தப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டு இறுதியில் மீதியாக காணப்பட்ட 273 மில்லியன் தொகை புதிய கடன் தொகையாக மீளமைக்கப்பட்டிருந்தது. மேற்படி கடன் தொகைக்கு ஏற்புடையதாக தவணை செலுத்துவதற்கு 06 மாத காலங்களிலான சலுகை காலம் வழங்கியிருந்ததுடன், அந்தக் காலப்பகுதியும் 2020 ஏப்ரல் மாதம் முடிவடைந்திருந்தது. அதன்படி 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் கடன் தொகை பொருட்டு செலுத்தப்பட வேண்டிய ரூபா.28,076,000 ஆன தவணை தொகையும் ரூபா.21,828,756 ஆன வட்டி தொகையும் கணக்காய்வு திகதியான 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியிலும் செலுத்துவதற்கு சபைக்கு முடியவில்லை.

(உ) சிறிய கைத்தொழில் திணைக்களத்திடமிருந்து இலங்கை கைப்பணி கைத்தொழில் சபையிடம் கையளிக்கப்பட்டிருந்த பெறுமதி ரூபா. 48,318,157 ஆன 2 ஏக்கர் 21 பேர்ச் அளவிலான மொறட்டுவை, கட்டுபெத்த நிலப்பகுதியில் காணப்படும் 39,364 சதுர அடியிலான ஐந்து கட்டிடங்களில் காட்சிக்கூடம், அரசாங்கத்தின் கணக்காய்வுப் பிரிவு, கொள்வனவுப் பிரிவு, களஞ்சியம் தவிர்ந்த, லக்சல தச்சு தொழிற்சாலை மற்றும் தங்குமிடங்கள் அமைந்துள்ள அண்ணளவாக 15,000 ம் சதுர அடியிலான இட அளவு மற்றும் தச்சு வேலைத்தளத்திற்குரிய சொத்துக்கள் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் பயனற்று காணப்பட்டது.

(ஊ) அமைச்சரவை தீர்மான இலக்கம் 12/1523/553/020 மற்றும் 2012 ஒக்டோபர் 11 ஆம் திகதிய அமைச்சரவை அனுமதிமூலம், காலி உணவட்டுன வரையறுக்கப்பட்ட லங்கா சளுசல கிளையில் அமைந்துள்ள 01 ஏக்கர் மற்றும் 30.6 பேர்ச் அளவிலான காணி மற்றும் கட்டிடங்கள் இலங்கை கைப்பணிகள் சபையிடம் சட்ட ரீதியாக ஒப்படைப்பதற்கு அனுமதி கிடைக்கப்பெற்றிருந்தது. அதன் பொருட்டு லங்கா சளுசல கிளையில் பணியாற்றும் 13 ஊழியர்களை சுயமாக ஓய்வுப் பெறச் செய்விப்பதற்கு தேவையான ரூபா.15,248,576 ஆன தொகையை, சளுசல கிளை அமைந்துள்ள காணியின் கட்டிடம் கொள்வனவு செய்வதற்கான கொள்வனவு தொகையாக கருதி சபையால் 2012 ஆம் ஆண்டு திசெம்பர் 12 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்தது. மேற்படி சொத்துக்கள் தொடர்பில் மற்றுமொரு தரப்பு சளுசல நிறுவனத்திற்கு எதிராக வழக்கு தொரப்பட்டதன் காரணமாக காணியை கொள்வனவு செய்வதற்கு பணம் செலுத்தப்பட்டு 09 மாதங்கள் முடிவடைந்திருப்பினும், குறித்த காணியை சபையிடம் கையகப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

(எ) இலங்கை கைப்பணிகள் சபையிடம் பொருட்களை வழங்கும் வழங்குநர்களிடம் செலுத்துவதற்காக 2014 ஆம் ஆண்டில் இலங்கை வங்கியிடம் வழங்கியிருந்த

ரூபா.150,000,000 ஆன சுழற்சி கடன் வசதிகள் 2019 ஆம் ஆண்டு யூலை 03 ஆம் திகதி ரூபா.15,000,000 ம் வரை மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. சபையால் மீளாய்விற்கான ஆண்டில் மொத்தம் ரூபா.18,384,206 ஆன கடன் தொகை அவ்வப்போது பெற்றுக்-கொண்டிருந்ததுடன், 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் சீராக்கப்படாத குறுகியகால கடன் மீதி ரூபா.14,652,784 ஆகும். பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் தொகை பொருட்டு கடன் வட்டியாக 2020/21 ஆம் ஆண்டுக்காக ரூபா.774,036 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், அதனுள் கடன் தொகை செலுத்தல் தாமதமடைதல் காரணமாக வங்கியால் அறவிடப்பட்ட ரூபா.4042,981 ஆன அபராத வட்டியில் வட்டிப் பணத் தொகையும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஏ) 2019 ஆம் ஆண்டில் ஆரம்ப அரையாண்டு காலப் பகதியில் ரூபா.345,040,671 ஆக காணப்பட்ட மொத்த விற்பனை வருமானம் 2020 ஆம் ஆண்டின் ஆரம்ப ஆரையாண்டு இறுதியில் ரூபா.160,002,139 ஆனதுடன், அது முன்னரான ஆண்டுடன் ஒப்பிடுகையில் 74% ஆக மேலும் வீழ்ச்சியடைந்திருந்தது. கொவிட் தொற்று நோய் நிலைமைக்கு மத்தியில் வெளிநாட்டவர்கள் வருகை தராமை காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டிருந்தாலும், உள்நாட்டு சந்தையில் உற்பத்திகளை விற்பனை செய்வதற்காக புதிய விலை நிருணயிக்கும் உபாய முறைகளை பின்பற்றி உள்நாட்டு மட்டத்தில் சந்தைப்படுத்தலை அதிகரிப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட-வில்லை. அதன் காரணமாக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் ஊழியர் சம்பளம் அடங்கலாக ஏனைய செலவினமாக ரூபா.65,771,252 ஆன ஒதுக்கீடுகள் பொது திறைசேரியிடம் பெற்றுக்கொள்ள வேண்டி ஏற்பட்டது.

(ஐ) சபைக்குரிய சந்தைப்படுத்தல் கண்காட்சி கூடங்களை பராமரிப்பதன் பொருட்டு அரசாங்கத்தின் கட்டிடங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய வரிதொகை, உரிய நேரத்திற்கு செலுத்தப்படாமை காரணமாக 08 காட்சிக்கூடங்களின் பொருட்டு 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா.30,793,923 ஆன தொகை நிலுவையாக காணப்பட்டது. பௌத்தாலோக்க மாவத்தை கட்டிடம் பொருட்டு ரூபா.10,372,983 ஆன தொகை வரிபணமாக கொழும்பு மாநகர சபையிடம் செலுத்தப்படவில்லை.

(ஒ) 1990 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட கலைஞர்களின் நலனோம்பல் அபிவிருத்தி நிதியத்தின் யாப்பு ஒழுங்குவிதிகள் பிரகாரம் கலைஞர்களின் நலனுக்காக Benevolent Fund என்ற பெயரில் பராமரிக்கப்பட்ட நிதியத்தில் 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா.5,023,891 தொகை சேர்க்கப்பட்டு நடைமுறை கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. இந்த நிதி கைப்பணி சபையிடம் ஒப்படைப்பதற்கு 2007 ஆம் ஆண்டு அமைச்சரவை தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருப்பினும், இது வரை குறித்த கையளிப்புகளை மேற்கொள்ளாது நிலையான வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்படடு நிதியத்தின் குறிக்கோள்களை நடைமுறைப்படுத்தவதற்கு செயற்படாது பயனற்று காணப்பட்டது.

(ஓ) அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட்ட ஊழியர் பிணை தொகை சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரின் பெயரில் வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யாது, அதற்கு முரணாக ரூபா.2,4460,000 ஆன தொகை சபையின் நடைமுறைக் கணக்கில் வைப்புச் செய்து, சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரிடம் செலுத்தப்பட வேண்டிய வட்டி தொகை சபையால் கணக்கிடப்பட்டு செலுத்தியமை காரணமாக 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா.1,097,804 ஆன மேலதிக செலவினம் மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது.

டப்.பீ.சீ.விக்கிரமரத்ன,

கணக்காய்வாளர் அதிபதி